சிறந்த பேச்சாளர்கள்

'தொடர்பன்'

தமிழர் பதிப்பகம்

எமது அடுத்த படைப்புகள் !

வீராயி — "தமிழ் ஒளி"

புரையோடிக் கொண்டிருக்கும் சமுதாய ஊழல்களை வைத்துக்கொண்டு தமிழர் நிமிர்ந்து நடக்க முடியுமா? பெண்-ஆண் மனமொத்தபின் பெற்றோரின் சாதி சமயம் என்ன செய்தது?

எளிய நடையில் அமைந்த காவியத்தில் முடிவைத் தெரிந்து கொள்ளுங்கள்.

●

வானொலியிலே...........

சிறந்த பேச்சாளரான கி. ஆ. பெ. விசுவநாதம் திருச்சி வானொலி நிலையத்தில் பேசிய பேச்சுக்களின் தொகுப்பைக்கொண்ட அரிய நூல்.

●

இசைக் குயில்கள்... ? —புலவர்: அன்பு கணப

தமிழர்களின் உள்ளத்தைத் தம் இசையால் சொக் செய்துவரும் இசைவாணர்களின் மாண்பை விளக் இனிய நூல்.

●

தமிழர் பதிப்பகம்

81, லிங்க செட்டி தெரு :: சென்னை

க-270

சிறந்த பேச்சாளர்கள்

[தொகுப்பு நூல்]

PRESENTED BY
V. PR. PL. M KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

O31, 6KN
17.3.79

திட்டியவர் :
"தொடர்பன்"

அணிந்துரை :
அன்பு கணபதி

Y. M. G. ASSOCIATION PAGANERI.
பாகனேரி

தமிழர் பதிப்பகம்
81, லிங்க செட்டித் தெரு
சென்னை-1

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISVANATHAN CHETTIAR
PAGANERI.

வெளியீடு : க

உரிமை ஆசிரியர்க்கே

விலை ரூ. 1/-

பேச்சாளர்கள் !

1. திரு. வி. க. 1
2. ச. சோமசுந்தர பாரதியார் 11
3. ஈ. வெ. ரா. 18
4. ரா. பி. சேதுப்பிள்ளை 30
5. ஔவை. சு. துரைசாமி 36
6. கி. ஆ. பெ. விசுவநாதம் 40
7. சி. என். அண்ணாத்துரை 50
8. உ. முத்துராமலிங்க தேவர் 61
9. ப. ஜீவானந்தம் 67
10. ம. பொ. சிவஞானம் 73

Printed at Senguntha Mithran Press for Tamilar Pathippagam (T.P. No. 283) 1000 Copies–7-'47.

பதிப்புரை

புதிய துறைகளில் நூல்களை வெளியிட வேண்டுமென்ற எங்கள் நோக்கத்தின்படி **"சிறந்த பேச்சாளர்கள்"** எனும் இந்நூலை எமது மூன்றாவது வெளியீடாக மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்.

எமது பதிப்பக மூலம் வெளியிட இசைந்த 'தொடர்பனு'க்கும், நல்லதோர் அணிந்துரை அளித்த திரு. அன்பு கணபதி அவர்கட்கும் எங்கள் அன்பு!

தமிழர் பதிப்பகத்தார்.

பாகனேரி

அணிந்துரை

சொற்பொழிவு—மேடைப்பேச்சு என்பது ஒரு தனிக் கலை; கொடுப்போன், கொள்வோன் இருவருக்கும் இன்பமும் ஏற்றமும் தரக்கூடிய ஓர் எழிற்கலை.

'விரைந்து தொழில்கேட்கும் ஞாலம்; நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்'

என்பது வள்ளுவன் வாக்கு. சிறந்த பேச்சாளன் தனது திறம் மிக்க பேச்சினால் உலகையே தன்வயப்படுத்த முடியும். சரிதம் இதற்குச் சான்று பகரும். இன்றைய உலகநாடுகளின் அரசியல் ஆட்சித் தலைவர்கள் பலரும் பெரும் பேச்சாளர்களாக இருப்பது கண்கூடு.

தமிழ் நாட்டில் பேச்சுக்கலை சிறந்து ஓங்கி வருகின்றது. சிறந்த பேச்சாளர் பலரை இன்றைய தமிழ்நாடு பெற்றிருப்பது மகிழ்ச்சிக்கு உரியதே.

நம்முடைய தலைமுறையில் வாழும் சிறந்த சொற்பொழிவாளர் பதின்மரை நமக்கு 'தொடர்பன்' அறிமுகப்படுத்துகிறார். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் இனிமை தருவன. அவற்றில் இனிப்பும் உண்டு; காரமும் உண்டு. பொருளில் எல்லாம் சுவை பயப்பனவே; நாட்டிற்கு நன்மை அளிப்பனவே.

பேச்சைப் போலவே செயலும் சிறக்க வேண்டும். பேச்சுக் கலை சிறந்த அளவில் செயற்கலை இன்னும் தமிழ் நாட்டில் உயரவில்லை. பேச்சாளர்கள் மேலும் பெருக வேண்டும். அவ்வாறே செயலாளர்களும் நம் நாட்டிற்கு மிகுதியும் தேவை.

சிறந்த பேச்சாளர்களை நூல்வடிவில் அறிமுகபடுத்துவது என்பது தமிழில் புதிய முயற்சி; நல்ல முயற்சி. இம் முயற்சி மேற்கொண்ட 'தமிழர் பதிப்பகத்'தைப் பாராட்டுகின்றேன்.

பொதுவாகத் தமிழ் உலகமும் சிறப்பாகத் தமிழ் இளைஞர் உலகும் 'சிறந்த பேச்சாளர்க'ளை நன்கு வரவேற்கும், வரவேற்றுப் பயனடையும் என நம்புகிறேன்.

அன்பு கணபதி

பேச்சாளர்களைப் பற்றி

3641

நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு எழுத்தறிவில்லாத நம் நாட்டு மக்களை விரைவில் புத்தறிவு பெறத் தூண்டுவன பேச்சு, நாடகம், வானொலி எனும் முத்துறைகள்தாம். மற்ற இரண்டு துறைகளைவிட வெகு எளிதில் பயன்படக் கூடியது பேச்சுத் துறையாகும்.

தம் கல்வி கேள்விகளால் உண்மையை விளக்கிக் கூறி, உணர்ச்சியைத் தூண்டிவிட்டு மக்களை விழிப்புற்றெழச் செய்யும் நாவன்மை படைத்த பேச்சாளர்கள் நம் நாட்டிற்கு மிகமிகத் தேவை. அவர்களது திறத்தையும் கருத்தையும் எடுத்துக் கூறும் நூல்கள் பல பதிப்பிக்கப்படவேண்டும். அப்படிப் பதிப்பிக்கும் போது அரசியல், மத—கட்சி வேறுபாடின்றிப் பேச்சாளர்களின் சிறப்பியல்புகளைப் புலப்படுத்தி வெளியிடுவது நலம்.

இவ்வாறு செய்தால், பேச்சாளர்கள் எவ்விதம் முன்னுக்கு வந்துள்ளார்கள் என்பதைப் பொதுமக்கள் உய்த்துணர வழி பிறக்கும். ஆசை மிகுதியால் தாமும் பேச்சு வன்மை பெற முயல்வார்கள். அதனால் அவர்களது அறிவு பெருகி கருத்துக்களும் திறமையும் வெளிப்படும்.

மேற்கூறிய எண்ண அலைகளின் மோதலினால் கரை சேர்க்கப் பட்ட படகுதான் 'சிறந்த பேச்சாளர்கள்' எனும் நூல்.

இதில், இறந்துபோன பேச்சாளர்களைப் பற்றி ஒன்றும் சொல்லப் போவதில்லை. இன்று உயிரோடு நம்முடன் வாழ்ந்து வரும் சிறந்த தமிழ்ப் பேச்சாளர்களைப் பற்றித்தான் எழுதியுள்ளேன். இவர்களில் சிலர் முதியவர்கள்; சிலர் நடுத்தர வயதினர்; சிலர் கட்டிளம் பருவத்தினர்.

முடிந்தவரையில் காலத்தின் முற்போக்குக் கருத்துக்களை அவரவர்களின் சொற்களினாலேயே கொடுத்து, அவரவர் பேச்சுத்திறமையை அறியும் விதத்தில் எழுதியுள்ளேன்.

இனி, பேச்சாளர்களைப் பற்றி ஒரு சில சொற்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. நம் நாட்டில் எத்தனையோ பேர்கள்

பேசுகின்றனர்! ஆனால், அவர்கள் பேச்சில் கவர்ச்சி இல்லை; உணர்ச்சி இல்லை; தமக்கே இருக்கவேண்டிய சில தனிப் பண்புகள் இல்லை. எடுத்ததற்கெல்லாம் கிளிப்பிள்ளைகளைப்போல் பிறர் கருத்தைக் கையாளுகிறார்கள்! இத்தகைய 'நல்லியல்பு' வாய்ந்த பலரை நான் சிறந்த பேச்சாளர்கள் என்று கருத முடியவில்லை.

"தன்னுடைய திறமையை அறிந்தவன் எவனோ-உள்ளத்தில் அசையாத ஆர்வமும் முகத்தில் சிந்தனைக் கிளர்ச்சியும் படைத்து, இனிமையான குரலால் தன்குறிக்கோளைத் தெரிவிப்பவன் எவனோ—தூண் போன்று வாதிக்கும் ஆற்றல் பெற்று, திராட்சை போலும் சுவையான மொழிகளை அள்ளி வீசுபவன் எவனோ—மக்களின் எண்ணங்களை அழகாகவும் இனிமையாகவும் சுட்டிக்காட்டி அவர்கள் உள்ளத்தைத் தொட்டு இழுப்பவன் எவனோ—பல வழிகளிலும் சிறந்த பயன் விளையக்கூடிய சூழ்நிலையை உண்டாக்கி வளர்த்து மலரும்படி செய்பவன் எவனோ—அவன் எந்தக் காலத்தவனானாலும் எந்த நாட்டவனானாலும் கவலையில்லை; அவன் தான் சிறந்த பேச்சாளன்" என்று உலகத்திலேயே சிறந்த பேச்சாளனும் சீர்திருத்த வாதியுமான இங்கர்சால் கூறுகிறான். அவனது அளவுகோலைத் தழுவி கட்டுக் கோப்போடு தட்டுத்தடங்கலின்றிக் கருத்துயர்வோடு வரும் நல்ல தமிழ் நடையும், உணர்வை உள்ளத்தைத் தொடும் வன்மையும்—பெற்றவர்களைத்தான் இந்நூலுக்குக் கருப்பொருளாகக் கொண்டுள்ளேன்.

இது முதல் முயற்சி. எனவே இலைமறை காய்போன்ற சிலர் விடுபட்டு இருக்கலாம். இதைக் கண்டாவது ஆற்றல் படைத்தவர்கள் சிறந்த முறையில் எழுதவேண்டும் என்ற பேரவாவே என்னை இத்துறையில் இறங்கச் செய்துள்ளது. ஆழம் அறிந்துதான் காலை விட்டுள்ளேன்! நீந்த எண்ணமிருந்து நீருக்குப் பயந்தால் முடியுமா?

குறிப்புரை தந்துதவிய அன்பர்களுக்கும், இந்நூலை எழுத தூண்டுதல் செய்த நண்பர்களுக்கும், மகிழ்ந்து வெளியிட்ட தமிழர் பதிப்பகத்தாருக்கும் என் நன்றி!

'தோன்றுந் துணையாக' இருந்து 'எனை ஆளாக்கி' விட்டுள்ள பாட்டிக்கும் பாட்டனார்க்கும் இந்நூலைப் படைக்கின்றேன்!

"தொடர்பன்"

சிறந்த பேச்சாளர்கள்

1. திரு. வி. கல்யாணசுந்தரனார்

'தமிழில் கூட பேசவருமா' என்று பிறமொழிப் பயிற்சி மிகுதியால் எள்ளி நகையாடிக் கொண்டிருந்தவர் களின் அறியாமையை அகற்றி, மாற்று மொழிகளைப் போல் தமிழிலும் பேச முடியும் என்று முதல முதலில் அரசியல் உலகில் பேசிக் காண்பித்தவர் திரு. வி. கல்யாண சுந்தரனார் ஆவர்.

படபட வென்று அடித்துக் கொண்டிருக்கும் கண்கள்; அடிக்கடி மூச்சுக் காற்றை வலப்பக்கமும் இடப்பக்கமும் செல்லுமாறு தூண்டிக் கொண்டிருக்கும் விரல்கள்; மாநிற மான உடல்; பேசிப் பேசி இளைத்த ஒல்லியான உடலை மறைக்கும் வெண்ணிற ஆடைகள்; பழமை விருமபிகளாக இருப்பினும் புதுமையைத் தள்ளிவிட முடியாது என்று எடுத்துக் காட்டுவது போல மின்னும் மூக்குக் கண்ணாடி! அதிகமாய்ப் பிய்த்து விடப்பட்ட தேங்காய்க்குடுமிபோன்று மழமழப்பான சென்னியிலுள்ள உச்சிக்குடுமி! இதுவே இன் றைய திரு. வி. க. வின் பொதுவான தோற்றம்.

இன்றுள்ள மற்றைய பேச்சாளர்களைக் காட்டிலும் திரு. வி. க.வுக்கு ஒரு தனிப்பண்பு இயல்பாக அமைந்திருக்கிறது.

அப்பண்பு, அவரை சூழும் உள்ள கூட்டத்தினர் எத்தகைய மனப்பான்மையினர் என்பதை வெகு எளிதில் உய்த்துணரும்படிச் செய்து விடுகிறது. ஆகையால்தான், அவரால் மாணவர் நிரம்பியுள்ள கூட்டத்தில் மாணவர்க்கு வேண்டியவாறும் தொழிலாளர் பெருகி உள்ள இடத்தில் தொழிலாளர்களுக்கு ஏற்பவும், சைவர் அதிகமாக உள்ள கூட்டத்தில் சைவர்க்கு ஒத்த விதத்திலும், அதே போல் வைணவர் கூட்டத்தில் வைணவர்க்குத் தகுந்தவாறும் பேச முடிகிறது. தமது பேசும் ஆற்றலினாலும், என்றும் ஒலித்துக்கொண்டிருக்கக்கூடிய இனிய சொற் கோப்பினாலும், அவரவர் 'பக்குவ நிலைக்கேற்ப' பேசுகின்ற "உள்ளங்கவர் கள்வ'ராவர் அன்பர் திரு. வி. க.

தமக்கே உரிய தனி நடையில், அழகு பட உணர்ச்சி ததும்பப் பேசுவதில திரு. வி. க. மிகச் சிறந்தவர். பண்டைத் தமிழரின் குடிதழுவிய கோஞட்சி நிலையும், 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்ற விரிந்த உள்ளக் கிடக்கையும், உயர்வு தாழ்வற்ற எண்ணமும்-அவரது பேச்சிலே அடிக்கடி அம்மானை ஆடி உள்ளன. அதோடு உருசியா தேசத்தின் பொது உடைமையும், கரிபால்டியின் உரிமை முழக்கமும், உணர்ச்சியூட்டும் அவரது பேச்சில் 'நிரலே நிரலே' காணப்படுகின்றன. அவரது பேச்சு இலக்கண வரம்பு மீறாத பேச்சாகும். ஆயினும் அதே சமயத்தில் இனிமையும் எளிமையும் இயல்பாக உள்ளதொன்று.

அன்பர் திரு. வி. க. 'நாத்திகம் பேசி நாத்தழும் பேறும் சழக்கர்களின்' நண்பர். வீண் துறவிகளின் எதிரி. வைதிகர்களுக்குள் உண்மையான வைதீகர். சீர்திருத்த வாதிக்குச் சீர்திருத்த வாதி. என்ன......நீரும் நெருப்பும்

ஒட்டாதே, எப்படி ஐயா ஒரே சமயத்தில் சீர்திருத்த வாதியாயும் வைதீகராகவும் காட்சி அளிக்க முடியும் என்று கேட்கத் தோன்றுகிறதா? அதால்தான் ஐயா, திரு. வி. க. நம்மால் அறிந்து கொள்ள முடியாத பெரும்புதிராக இருக்கிறார்!

நாட்டின் இன்றைய உண்மை நிலையை-நடக்கும் திருவிளையாடல்களை-உள்ளது உள்ளபடியே மக்களுக்கு முன் போல் அஞ்சாது எடுத்துரைக்க தமது தள்ளாமையைக் கருதாது, தம் ஆற்றலை வீண்போக்காமல் வெளிப்படுத்தி தொண்டு செய்யும்படி இளைஞர் உலகம் திரு. வி. க. வை வருந்தி வருந்தி அழைக்கிறது.

திரு. வி. க. வின் பேச்சும் எழுத்தும், உருவமும் நிழலும் போன்றது. அவரது எழுத்தும் நம் பக்கத்திலிருந்து அவரே நேரில் பேசுகிறமாதிரி அமைந்திருக்கிறது.

இதில் இவருக்கு இணையாகவேறு எவரும் இல்லை என்றே துணிந்து கூறலாம்.

இவரது பேச்சு, பொதுவாக எடுத்த பொருளுக்குத் தகுந்தவாறு உலகியல் அறிவைப்புகுத்தி, பரந்த மனப்பான்மையை எவர் மனமும் புண்படாத வகையில் புகுத்தும் வன்மை வாய்ந்தது.

இந்தப் பின்னணியுடன் இனி திரு. வி. க. பேசுவதைக் கேட்போம்.

"ஒரு நாட்டின் நாகரிகமோ அநாகரிகமோ அந் நாட்டின் அரசியலை யன்றோ பொறுத்து நிற்கும்? அரசியல்

என்பது உலகிடை மறவினைமலியாது, அறவினை மலிபு மாறு செய்வதற்கு ஏற்பட்ட ஓர் அமைப்பு.''

இது அரசியல் என்பதற்கு அவர் கூறும் விளக்கம். அவரது வீரம் செறிந்த பேச்சு வேண்டுமா?

இதோ:

''சிறப்பு வாய்ந்த நமது அருமைத் தமிழ் நாடெங்கே? தமிழ் நாட்டின் வழக்க ஒழுக்கமெங்கே? அன்பெங்கே? அரசெங்கே? வீரத் தாய்மாரெங்கே? தமிழர்களே! உங்கள் தொன்மை என்ன? உங்கள் பெருமை என்ன? உங்கள் ஆண்மை என்ன? உங்களுக்குள் இதுபோழ்து எத்துணைப் பிளவு! நம்தமிழ்த்தாய், கால்வேறு-கை வேறு-தலை வேறு-வேறாகக் கூறுபட்டுக் கிடப்பதைக் காண உங்கட்குக் கண்ணில்லையா? நினைக்க மனமில்லையா? மீண்டும் நீங்கள் பண்டைநிலை எய்தவேண்டாமா? வேண்டுமேல் பழந்தமிழ் நூல்களை ஆராய்ந்து உண்மைத் தமிழ்நாட்டைக் காண-எழுங்கள்! எழுங்கள்!!''

''நம்மவர் உண்ணும் உண்கலம் யாருடையது? உடுக்கும் உடை யாருடையது? உறங்கும் படுக்கை யாருடையது? எழுதும் கருவி எந்நாட்டினது? எழுதும் காகிதம் எந்நாட்டினது? எரியும் விளக்கு எந்நாட்டினது? குழந்தைப் பால் நம்முடையதாக இல்லையே! குடிக்கும் பாத்திரம் நம்முடையதாக இல்லையே! ஏறும் வண்டி நம்முடையதாக இல்லையே! நீர்க்குழாய் நமக்குண்டா? சர்க்கரை நமக்குண்டோ? மேலுங் கீழும் சுற்றும் முற்றும் உற்று நோக்கினால் நம் தாயைக் காணோம்! அயல்நாட்டு மாதர்களே தோன்றுகின்றார்கள். தாயின் அழகை மட்டும் கேட்கிறது.''

''ஒருவன் தன் பொன்னை இழக்கலாம்; பொருளை இழக்கலாம்; தனியாக் காதலுடைய மனைவியையும் இழக்கலாம். ஆனால், அவன் தன் பிறப்புரிமையை

இழத்தலாகாது. பிறப்புரிமையை இழந்து வாழ்கிறவன் மனிதனாகான்''.

இன்றைய திரு. வி. க. வின் பேச்சல்ல இது. 1921-ம் ஆண்டு திரு. வி. க. வின் நரம்பு முறுக்கேறும் சொற்கள். ''தமிழ்த் தென்றலி''லிருந்து வந்தாலும் சில்லென்று இராமல் கனல் கக்குவதைக் கவனியுங்கள்.

''தீண்டாத சாதியார்'' என்று உயர்ந்த சாதியாரால் ஒதுக்கப்பட்டுள்ள என்னருமைச் சகோதரர்கள் பாரத புதல்வர்களல்லவோ? அவர்கள் உழைப்பன்றோ நாம் உண்ணும் உணவு? நாம் உடுக்கும் உடை? நாம் வாழும் வீடு வாசல் முதலியன யாவும்? அவர்கள் காலை முதல் மாலைவரை நெற்றி நீர் நிலத்தில் விழ வயல்களில் உழைக்கிறார்கள். அவர்கள் உழைப்பால் தானியங்கள் மலை மலையாக நம்மில்லங்களில் குவிகின்றன. உழைக்கும் அவர்கட்கோ போதிய உணவில்லை. அவர்கள் உழைப்பை உண்ணும் நாம் பட்டாடை உடுத்துகிறோம்; மாடியில் உறங்குகிறோம்; அவர்களோ வெயிலால் உலர்ந்து மழையால் நனைந்து, மரத்தடியில் உறங்குகிறார்கள். காடுகளிலும் மேடுகளிலும் திரிந்து நமது ஆடுமாடுகளை மேய்ப்பவர்கள் அவர்கள். பாலையும் தயிரையும் நெய்யையும் உண்பவர்கள் நாம். அவர்கட்கோ கிணற்று நீரும் குளத்து நீருமே அருமை. அவர்கள் உழைப்பையுந் தின்று, அவர்களைத் தெருக்களிலும், கிணறுகளிலும், கோயில்களிலும் நெருங்க ஒண்ணாதவாறு அடித்துத் துரத்துவது நியாயமா? தருமமா? அன்பர்களே ஒருங்கள்.''

1924-ம் ஆண்டே இப்படிக் கல்லையும் கனிவிக்கும் வகையில் அவர் உருக்கமாகப் பேசியும் கூட ஆதித்திராவிட மக்கள் மேன்மையுறும் வகையில் பிறர்க்கு மனமாற்றம் ஏற்படவில்லையென்றால், மனிதனை மனிதன் அடிமையாக வைத்துக்கொண்டிருக்கும் சாதித்திமிரின் ஆணிவேர் எவ்

வளவு ஆழத்தில் ஊன்றியிருக்கிறது! இதற்கு மாற்றம் "ஓடப்பர்" "உதையப்ப" ராலுல்தான் முடியும்போல் இருக்கிறது!

> "நாட்டு மொழியினிடத்துப் பற்றின்றி நாட்டுக்குச் சேவை செய்வது விழலுக்குச் நீர் பாய்ச்சுவது போல் ஆகும்."

இதை அவர் இன்றல்ல 1921-லே கூறியுள்ளார்.

> "தலைவர்களிடத்திலுள்ள சோம்பல், பொறுமை, "தான்" என்னும் முனைப்பு, ஒற்றுமை யின்மை புறங்கூறல் முதலிய இழிவுகள் நமது நாட்டின் பெருமையையும், எழுச்சியையும் கெடுக்கின்றன. தலைவர்கள் திருந்தினால் நாடு திருந்தும். 'தங்களை' மறந்து வேலை செய்யுந் தலைவர்கள் தேவை—"

'கோடுயர்ந்து குன்றம் தாழ்ந்த'போது செய்த எச்சரிக்கையல்ல இது. அவர் அரசியலில் மிகுந்த பங்கெடுத்துக்கொண்ட வேளையில—அதாவது 1921-ல் தென்னார்க்காடு ஜில்லா மூன்றாவது அரசியல் மாநாட்டில் செய்த தலைமை உரையில 'தலைவர்கள் தேவை' என்று விண்ணப்பித்துள்ளதை நாம் கூர்ந்து பார்க்கவேண்டும்.

> "இந்தியாவின் குறைகளெல்லாம் வெளிவர வேண்டிய காலம் இதுவே, இதுகாறும் வெளிப்போந்துள்ள குறைகள் ஒரு சில. இன்னுங் கிளம்பவேண்டிய குறைகள் பல உள. அவைகளும் விரைவில் தலைகாட்ட வேண்டுமென்பது எனது கோரிக்கை. நாட்டின் குறைகளைக்காணச் சிலர் அஞ்சுவர். அவைகளைப் பற்றி எனக்குச் சிறிதும் அச்சமில்லை. குறைகளின் தோற்றம் நாட்டை விரைவில் சமன் செய்யும் நீர்மைத்து என்பது எனது கருத்து. இந்தியா

ஓரினமாக வேண்டுமானால் அதன் மாட்டுள்ள குறைகள் வெளிக்கிளம்பி வெடித்தே தீரவேண்டும்.''

திரு. வி. க. 1925-லேயே இவ்வாறு அஞ்சாது முன்னறிந்து குற்றங்களைய கூறியிருப்பதற்கு இன்றுவது அவரைப் பாராட்டவேண்டியது நம்மவர் கடனாகும்.

இதுவரை திரு. வி. கவின் வீரம் செறிந்த சொல்லின் ஊடே குற்றங்களையும் குணத்தைக் கண்டோம். இனி, அவர் சொல்லும் ஆக்க வேலையைக் கவனிப்போம்.

> "இளமையில் பகைமை, பொறாமை முதலியன நெளிதல் அரிது; அதன் கண் அன்பும் அருளும் பொலிதல் இயல்பு பகைமை பொறாமை இல்லா விடத்திலேயே ஒற்றுமைக்கு இடனுண்டு. ஆகவே, இளமை, ஒற்றுமைக்கு உறுகருவியா யுதவுவதென்க. ஒற்றுமை என்ன செய்யாது? ஒற்றுமை எல்லாஞ் செய்யும்.''

> "எக்காரணத்தாலேனும் நாடுகள் சவலை யுறுமேல், அச்சவலை போக்கும் ஆற்றல் அவ்வந் நாட்டு இளைஞாயிறுகளுக்குண்டு, நமது நாட்டின் சவலையைக் கூற வேண்டியதில்லை. அது வெள்ளிடைமலை.''

இனி, இளைஞர்களைப்பற்றியும், அழகைப்பற்றியும், அவரது சித்தரிப்பைப் பார்க்கலாம்:

> "நல்லுடலுக்கு அறிகுறி யென்னை? அதன்கண் ஊறும் அழகே யாகும். அழகிலா உடல் நோயுடையது என்பதில் என்ன ஐயம்? இளமை அழகுக்குரியது. இக்கால இளைஞர்களின் முகத்தில் அழகு ஒழுகுகிறதோ? இளைஞர்களல்லவோ நாட்டின் செல்வம்? அச்செல்வம் எங்கேயிருக்கிறது? அதை என்ன உன்ன உள்ளங் குழைகிறது!

பொதுவாக நமது நாட்டு இளைஞர்களையும் சிறப்பாகப் பள்ளிமாணுக்கர்களையும் நோக்குழி நாட்டுச்செல்வத்தின் நிலை புலனாகும். விழுந்த கண்ணும், வளைந்த முதுகும், சரிந்த தோளும், உடைந்த மார்பும், தளர்ந்த நடையுமுடைய உடலில் அழகுக்கடவுள் எங்ஙனம் கோயில் கொள்ளும்? அழகென்பது யாது? அழகு என்பது நிறத்தில், மயிர் நீவலில், மூக்குக் கண்ணாடியில், கழுத்துச்சுருக்கில், பட்டுடையில், பிற அணிகளில் அமைந்திருப்பதன்று. மூளை, இதயம், நுரையீரல், மண்ணீரல், குண்டிக்காய் முதலிய பேருறுப்புகள் செழிய நிலையில் நின்று ஒழுங்கு பெறக் கடனாற்றலால் உற்று, நரப்புக் கட்டினின்றும் தடைபடாக் குருதியோட்டத்தினின்றும்-முகிழ்க்குந் தசையிடை யரும்புவது அழகாகும்."

தானே கேள்வியை எழுப்பி, அதற்குப்பதிலும் சொல்லி, அதன் வழியாக உயிர் ஓட்டத்துடன் எவ்வளவு அழகாகத் திரு. வி. க. அழகையும், இளமையையும் இணைத்துக் கூறுகின்றார். மேலே மிக நன்றாக, இளமையின் அழகைப் படம் பிடித்துக் காட்டுகின்றார் எழுத்தோவியர் திரு. வி. க. பழமையில் மிக அழுத்தமான ஆர்வங் கொண்ட திரு. வி. க வின் சடங்கைப்பற்றிய எண்ணத்தைச் சிறிது ஆய்ந்து பார்ப்போம்.

"இந்நாளில் நமது நாட்டில் நடைபெற்று வருஉஞ் சடங்குகளில் சில குருட்டு நம்பிக்கைகள் நுழைந்திருக்கின்றன. அவைகளில் மூன்றைச் சிறப்பாகக் குறிக்கின்றேன். ஒன்று சடங்குகளைச் சமயத்துடன் தொடர்பு படுத்துவது; மற்றொன்று பிறப்பில் குறிக்கொண்டு நல்வினை தீவினைகட்குப் பண்டாரத்தையோ பார்ப்பானையோ பிறனையோ அழைப்பது; இன்னொன்று குறிப்பிட்ட ஒரு மொழியிலேயே மந்திரஞ்சொல்ல வேண்டுமென்பது. சடங்குகட்குஞ் சமயத்துக்குந் தொடர்பில்லை. சடங்குகள் வேறு; சமயம் வேறு.

இரண்டையும் ஒட்டவைத்தல் அறியாமை. நல்வினை தீவினைகட்குக் குறிப்பிட்ட ஒரு வகுப்பார் அல்லது வினைகளாற்றக் குறிப்பிட்ட ஒரு மனிதன் வேண்டுவதில்லை, அவ்வக் குடும்பத்திலுள்ள ஒரு முதியோரைக் கொள்வது நலன். மந்திரம் குறிப்பிட்ட ஒரு மொழியிலேயே அமைதல் வேண்டும் என்னும் நியதி இல்லை. அவரவர் தத்தம் தாய்மொழியில் மந்திரம் வகுத்துக்கொள்ளலாம்.''

இன்றும் அறியாமையில் மூழ்கி, உழலும் மக்களுக்கு திரு. வி. க வின் சடங்கு, மந்திரம் முதலியவற்றின் தெளிவான விளக்கம் மிகத் தேவையான தொன்று.

உலகம் முதலில் எப்படி இருந்தது. பின் எவ்வெவர்க்கு எல்லாம் அடிமையாகியது. இனி எப்படி மாறும் என்று திரு. வி. க. ஓர்ந்து கூறுவதை நோக்குவோம்.

''உலகம் சில காலம் குருமார் அடிவருடி நின்றது; சில காலம் மன்னர் வாள்வழி நடைபெற்றது; இப்போது வாணிபருக்கு இரையாகி வருகிறது; இனித் தொழிலாளர் வயப்பட்டு நலம்பெறப்போகிறது. தொழிலாளர் புரட்சி இது காலை உலகத்தைச் சூழ்ந்து முற்றுகை செய்திருக்கிறது! இனி அப்புரட்சி 'கொடுமை' 'அடக்குமுறை' என்னும் அரண்களைப் பொசுக்கி 'சமத்துவம்' என்னும் கோட்டையைக் கைப்பற்றிச் 'சுதந்திரம்' என்னும் அரியாசனமேறி சகோதரத்துவம், என்னும் கொடியைப் பறக்கவிடும்.''

கடைசியாக திரு. வி. க. வின் உயிர்மூச்சான உணர்வு எழுப்பும் பேச்சைக் கேட்போம்.

'' உலகிலுள்ள தாய்மார்களையும் நோக்குங்கள்; உங்களை ஈன்ற தாயையும் நோக்குங்கள், அத் தாய்மார்கள்

உரிமையென்னும் அரியாசனத்தில், முடியணிந்து, சோல் தாங்கி, தங்கள் சலைபூண்டு, இறுமாப்புடன் வீற்றிருக்கிறார்கள். உங்கள் தாயோ-நம் பெருந்தமிழ் அன்னையோ-எல்லோருக்கும் மூத்த நம் அம்மையோ-எந்நிலையிலிருக்கிறாள்? அவள் முடி எங்கே? அவள் செங்கோலெங்கே? அவள் சலைகளாம் அணிகளெங்கே? அவள் யாண்டுறைகிறாள்? அவட்குப் போதிய உணவுண்டா? உடையுண்டா? உன்ன உன்ன உள்ளங் குழைகிறது; கண்ணீர் பெருகுகிறது. நந் தமிழ்த்தாய் துச்சிறகிடந்து துயருறுகிறாள்; அலமருகிறாள்."

'ஏ தமிழனே! உன்னைத்தான் திரு. வி. க. கேட்கிறார். ஓடாதே! ஒளியாதே! அவரது அன்றைய படப்பிடிப்பு இன்றும் உருமாறவில்லை. இன்னுமா உறக்கம்? எழு, எழு என்று தட்டி எழுப்புவதுபோல் அல்லவோ அவரது உணர்ச்சியூட்டும் பேச்சு அமைந்திருக்கிறது. இத்தகைய பேச்சுகளை மேலும் காணவேண்டுமாயின் திரு வி. க. வின் 'தமிழ்த்தென்றலை'யும் 'இளமை விருந்தை'யும் தேடிப் பிடித்துப் படியுங்கள். நலல வேளையாக இவராலேயே இவரது பேச்சு நூல்வடிவாக வெளியிடப்பட்டுள்ளது. அவற்றைப் படிக்கும் எவரும் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்த அஞ்சாத, வீரம் கொஞ்சும் திரு. வி. க வின் திருவுருவைத் தம் மனத்தில் காணுமல் இரார் என்பது திண்ணம்.

அன்று அவர் சொல்லியுள்ளதெல்லாம் இன்று நினைவாக மாறிவருகிறதை என்றால் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. தமிழின் தொன்மையும், அதனைப் பாதுகாக்க வேண்டிய கடமையும், பிறமொழிக் காதலின் பேதமையும், இனித் தமிழன் செய்யவேண்டிய மொழி, நாடு, சமுதாயப் பணியும் அவரது அன்றைய பேச்சிலேயே நன்கு பொறிக்

கப்பட்டுள்ளதை நாம் முன்பு கண்டோம் அல்லவா? அவரது பேச்சு பாலைவனத்தில் இடும் கூக்குரலாக மாறி இருக்குமானல், இன்று தமிழ்நாட்டில் காணப்படும் விழிப்பு ஏற்பட்டிருக்கவே முடியாது என்று கூரையேறிக் கூறலாம்.

தமிழ்நாட்டைப் பல வழிகளில் செப்பம் செய்த 'தமிழ்ப்பெரியார்' திரு. வி. கவுக்கு இன்றைய தமிழ்நாடும், இனி ஏற்படப்போகும் 'தமிழர் நாடும்' தம் பெரும் நன்றியறிதலைத் தெரிவிக்கவேண்டிய கடமை உண்டு.

2. ச. சோமசுந்தர பாரதியார்

'தமிழரின் அறப்போர்' என்றும் 'இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி' என்றும் ஓர் ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த இயக்கத்தைப் பற்றி உங்களுக்கு நினைவிருக்கிறதா? மறந்துவிட்டீர்களா? தமிழர்களின் உடலில்-உள்ளத்தில் அன்று ஏற்பட்ட ஆறல் என்றும் அழியாத அந்த வீரத் தழும்பையா மறந்து போனீர்கள்? போகட்டும். அக்காலத்திலே நான் ஒரு பள்ளி மாணவன்.

எங்கள் பள்ளியிலே ஒரு பெருந் தமிழ்க் கூட்டம் நடந்தது. நல்ல உயரமுடன், வயிரம் பாய்ந்த உடல் கட்டுடன் கம்பீரத் தோற்றத்துடன், முறுக்கிவிட்ட மீசையுடன் கூடிய அன்பர் ஒருவர் பேசினர். பேசினவர் வேறு யாருமல்ல. தன்னேர் இல்லாத தமிழர் தலைவர் ச. சோமசுந்தர பாரதியார்தான். அன்று, அவர் வெண்டைக்காய்க்கு ஆங்

கிலேயன் Lady's finger என்றும், முருங்கைக்காய்க்கு Drumstick என்றும் தக்க சொல் கிடைக்காமல் திணறி, பொருளின் உருவைக்கண்டு பெயரிட்டு அழைக்கும் விதத்தை எடுத்துச்சொன்னபோது, எங்கள் இளம் மனதில் தமிழரின் மாண்பும் தமிழ்ச் சொல்லின் உயர்வும் ஊடுருவிப் பாய்ந்தது. மேலும், தமிழ் ஆண்டு தொடக்கம் தைத் திங்களிலிருந்து தொடங்கியுள்ளதுதான் வானநூல் முறைப்படி ஒழுங்கானதாகும் என்று அவர் சொன்னதும் இன்றும் எம்போன்றோர் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.

அந்நாள் முதல் சென்ற திருவள்ளுவர் நினைவு விழாவில் அவர் தலைமை வகித்துப் பேசியதுவரையில் பார்த்து வருகிறேன். அவரது தோற்றத்திலே எளிய மக்கள் மட்டும் அல்ல அறிஞர்கள் கூட சொக்கிவிடுகின்றனர். அவரது படிப்பும் பண்பும், யாருக்கும் எதற்கும் அஞ்சாத நெஞ்சழுத்தமும்-யாவர் மனதிலும் அவரைப்பற்றி நல்ல எண்ணங்கொள்ளும்படிச் செய்துவிடுகின்றன. அவரது பேச்சு, படித்தவர்களுக்கேயன்றி படியாதவர்களுக்கும் புரியும் வகையில் அமைந்திருக்கிறது; அமைந்துவிடுகிறது. அவரது எழுத்தைப் புரிந்துகொள்ள இயலாதவர்கள்கூட அவரது பேச்சைக்கேட்டு அறிந்துகொள்ள முடிகிறது!

உண்மையும் உறுதியுங்கொண்டு எழும்பும் அவரது பேச்சைக் கேட்போம்.

"அகில இந்தியாவுக்கும் ஒரு பொதுமொழி தேவையா என்பதை அறிய எல்லா நாகரிக நாட்டின் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். எந்த நாட்டிலாகிலும் பொதுமொழி உண்டா? நான் சரித்திரம் கற்றவன். யாரும் எனக்குச் சரித்திரம் தெரியாதென்று சொல்லிவிட முடி

யாது. உலகத்திலேயே யில்லாத ஒரு காரியத்தை இவரா (முதன் மந்திரி) செய்யப்போகிறுர்! சுமார் 800 ஆண்டு களுக்கு மேலாக ரோம ராஜ்யம் அரசாட்சி செய்த காலத் திலும் 50 மொழிகள் இருந்தன. பாரசீகமும் அப்படியே. துருக்கி அரசாங்கத்திலும் சீன அரசாங்கத்திலும் ஒரு பொது மொழி இருந்ததுண்டா? சமீபகாலத்து மகத்தான ரஷியா வைத்தான் எடுத்துக்கொள்ளுங்களேன். ஆசியாவில் பாதி யும், ஐரோப்பாவில் கால்பங்கும் கொண்ட ரஷியாவின் சர் வாதிகாரியான ஸ்டாலின் கூட இன்னும் ஒரு பாஷையைப் படி என்று கட்டாயப் படுத்தவில்லையே. அங்கென்ன அர சியல் நடககாமலா போய்விட்டது?.........

"...தொன்று தொட்டே ஐம்பதுக்கு மேல் வேறு பட்ட பல மொழிகள் வளர்ந்து பெருகிய நம் நாட்டில் இன்று ஒரு புது மொழியைப் பொது மொழியாக்கி ஆக்கம் வளர்த் தல் எளிது, இயல்வது, இன்றியமையாதது எனக் கருதுவது அறியாமையா? ஆணவமா? நிதானியுங்கள். ஒருகால் பின் இதனுல் நலம் வளருமென நம்பினும், இப்போது இதை வலுக்கட்டாயமாக்கத் தொடங்குவது அவசியமா? அவ சரமா? ஆழச் சிந்திக்கவேண்டாமா?

ஒற்றுமையை வளர்ப்பது இந்தியிலோ பிற எந்த மொழியிலுமோ இருப்பதன்று. மக்களின் மன இயல்பைப் பொறுத்துள்ளது. இந்தி மாகாணத்தில் நம்மிடை இல்லாத பல கொடிய முரண்பாடு, பிளவு, பகை, போர்கள் செழித்து வளரக்காணுகிறேம்.

......மொழிபற்றி என்றும் யாரும் தம்முள் மாறு பட்டுப் பகைத்த செய்தி கேட்டதுண்டா? சமயம் பற்றிய சண்டைகளும், கொள்கைகளுக்காகக் கொடும் பகைமையும், பல்காலும் எல்லா மக்களிடையும் ஏற்படுவதும் அவற்ருல் கடும் முரண், நெடும்போர், தீராப்பழி, அகலா இகல்கள் பெருகிவருவது மியல்பே. இவ்வாறு கொலை முதலிய பாவ மெல்லாம் வளர்க்கும் செவிலிகளான பல மதங்களை

மறுத்து ஒரு நாட்டாரை ஒரே சமயம் மேற்கொள்ளப் பண்ணி ஒற்றுமை வளர்ப்பது. வேண்டாத ஒரு புதுப் பொதுமொழி சுமத்துவதை விட நல்லதல்லவா?......

யாரையும் கேளாமல் தமிழர்மேல் அந்நிய ஆரியப் பிராகிருதமொன்றைச் சுமத்தத் துணியும் மனப்பான்மை யல்லவா ஜனநாயகக் கொள்கைகளுக்கு முற்றிலும் முரணு வது? வடநாட்டாரோடு நமக்கு ஒற்றுமை வளர்ப்பதாகச் சொல்லி இக்கட்டாய இந்தியால் நம்மவருக்குள்ளே கடும் பிளவு உண்டுபண்ணுவது என்ன முறை? தான் எது செய் யினும் சொல்லினும் தமிழர் எல்லோரும் மறுக்காமல் உடன் படல் கடன் என்பது நமக்கு நாளடைவில் நலம் தரும் கொள்கையாமா? கட்டாய இந்தியால் நமக்குள் பிளவு பெருகாதா? பெருகி நாளும் வளரவில்லையா?......"

உலகில் பொதுமொழியின்றி அரசியல் நடைபெறுகின் றது என்று பாரதியார் கொடுத்துள்ள சான்றைப் பார்த் தோம். ஒற்றுமையை வளர்ப்பது மொழியன்று; மக்கள் மன இயல்பு என்றதையும் கண்டோம். இந்தி இந்நாட்டில் வலுக்கட்டாயமாகப் புகுத்தப்பட்டால் என்ன விளையும் என்று பாரதியார் கூறுவதையும் பார்போம்.

"இந்தியைக் கட்டாயப்படுத்திப் படிக்கச்செய் வது தமிழ்க்கல்விக்கு இசைந்ததாக இல்லாமலிருப்பதோடு, தற்காலம் நம் தமிழ் இருக்கும் நிலையில், அதற்கும் அதன் கலைவளர்ச்சிக்கும் பெரிதும் தடையும், இடையூறும் விளை விப்பதாகவே இருக்கிறது.

தமிழ்ச் சிறுவர்களுக்குச் சிறு வகுப்பிலேயே இந்தி யைக் கட்டாயமாக நுழைப்பது தமிழ் இளைஞர்களின் முற் போக்கைத் தடுத்து அவர் உயர் கல்வியைக் கற்கவொட்டா மல் தடைசெய்யப்படுவதற்காகச் செய்யப்படும் சூழ்ச்சியே தவிர வேறில்லை.

"தமிழ் ஆரியத்தால் கெட்டு மலையாளமானது போல் இந்தியால் நொந்து, தமிழ், வடநாட்டுப் பெரியம்மன் வார்த்து உருமாறும்; இலக்கணக் கட்டழிந்து தட்டழியும். சுருங்கச் சொல்லின் தமிழ் தன் உயிரிழந்து இந்திமயமாக மாறும். தமிழ்மொழி யழிவு தன்னலவில் நில்லாது தமிழர் தம் தனிஉணர்வு கலை வளர்ச்சியையும் அழித்தல்திண்ணம். இந்திவந்தால் வட ஆரியர் உணர்வும் வழிகளுமே நாம் மேற்கொள்ள நேரும்,"

"தமிழ்ப்பெருமக்களே! நிதானியுங்கள். நல்ல தமிழரல்லார் நல்ல இந்தியநாகமாட்டார்; நல்ல மக்களுமே யாகமாட்டார். தங்கருமஞ் செய்யார், தவமுஞ் செய்ய வொண்ணார். ஆதலால் நந்தமிழறம் பேணவிடின் நல்ல இந்தியராகக் கடைத்தேறவும் இயலாது......

"அதிகாரத்துணையால் மக்கள் விருப்பம் கருதாமல் மற்றவர் எதிர்ப்பையும் மதியாமல் வலுக்கட்டாயமாய்த் தன் கொள்கைகளைச் சுமத்தி அடக்குமுறையால் எதிர்ப்பவரை நசுக்கியாள விரும்பும் தலைவரால் குடியாட்சி மாட்சி குன்றும்; மக்கள் உரிமை குறையும். ஜர்மனி இத்தாலி நாடுகளைப்போல நாளடைவில் நாமும் நாட்டின் பெருமை பேசி நம்மவர் மக்கட் பண்பும், தனி உரிமைப்பேறும் இழந்தழப் போம் ..."

தலைவரே! அடக்குமுறையின் விளைவை நுகர்ந்தோம். நாம் ஏன் தாழ்வுற்றோம்? உங்கள் நோக்கம்தான் என்ன?

"அறிவையே பழித்து அடிமைத் தொண்டே அனைத்தறமென உபதேசித்து மக்களை மதியிழக்கச்செய்து வாழ்வோர் சமய வீறும், அதற்கு மயங்கும் நம் புன் சமய வெறியும்தான் நம்மவரை உரிமையிழந்து முதலில் பார்ப்பனருக்குச் சமுதாய அடிமைகளாக்கி, நாளடைவில் அந்நியருக்கு அரசிய லடிமைகளுமாக்கியது. உரிமை வளர்க்கும் ஆங்கிலத்தாலேயே நாம் முதலில் அடிமை வெறுப்புணரத்

தொடங்கினோம். அதனால் எங்கும் எவரோடும் சம உரிமை கேட்கத் துணியலானோம். இதனால் தம் வீறும் பதவியும் குறைவது காண்போர், மீட்டும் சமயப்பேரால் நம்மவரை அறிவழித்துப் புதிய அரசியல் குருமார் சொன்னபடி தொண்டாற்றும் சூத்திரராக்கத் துணிந்து வழி தேடுகின்றனர். நாமே அவர் நோக்கத்திற்குத் துணை நின்று, நமது மெய் நலம் விரும்பும் நம்மவரை அடக்க உதவுவோமா ?

.........“ தமிழகத்தில் யாவரும் வாழலாம் ; யாரிடமும் நமக்குப் பகையில்லை. எனில், தமிழர் தனியாட்சிக்கே உரியதாக இருத்தல்வேண்டும். பிழைப்புக்காகத் தமிழ் நாட்டில் இருப்பவர்கள் எல்லோரும் தமிழராய் விடமாட்டார்; தற்கால அவசியத்துக்காகத் தமிழைப் பேசுவதாலும் தாம் தமிழரென கொள்ளப்பட மாட்டார். ஆங்கிலரும் ஆந்திரர் முதலிய பிறமொழியாளர் பலரும் தமிழகத்தில் குடியிருந்து வருகின்றனர். அவரெல்லாம் தமிழரா ? தமிழே தமக்குத் தாய்மொழியென மெய்யாகக் கருதிக் கையாளுபவர் தமிழராவர்.

......‘ நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தால் ’ மட்டும் போதாது, ‘ அது நமக்கே உரியதா ’ மென்பதறிதல் வேண்டும்.........

கேவலம் கட்சி வாதத்துக்குப் பேசி அந்நியருக்கு உறவாய்—நம்மவர் பகைவராகப் போகிறீர்களா ? அன்றி என்றும் ஆட்சிமுறை வளர்க்க விருப்பமா ? ‘முன் மக்களுக்கு உரிமை வேண்டினது முறை ; இப்போது நம் தலைவராளுவதால் நமக்குரிமை வேண்டாமெனப் பேசிப் பேதறுக்கும் போலி வாதங்களுக்கு உடன்பாடா ? ஆளுவோர் யாராயினும் என்றும் நம்மவர் எல்லோருக்கும் ஆட்சி முறையில் குறைகாணவும், எதிர்த்துத் திருத்தி மாற்றும் உரிமை பேணவும் இடந்தரும் ஆட்சி முறை அமைக்க விருப்பமா ? ஆங்கிலர் ஆட்சி நம சமுதாய மக்கள் எல்லோரும் ஒத்த

உரிமை பெறுவதற்கு, அவ்வாறு பெறுமளவும் வேண்டும் என்பார் தவறு எவ்வளவோ, அவ்வளவு தவறுடையார் நாம் தேர்ந்த தலைவராட்சியில் நமக்கு உரிமை வேண்டா மென்பாரும். ஊன்றி நோக்கில் முன்னதிலும் பின்னதில் கேடு அதிகம் விளையும்.”

‘தமிழ்ப் பயிரில் இந்தி எருமையை மேயவிட்ட’ காலத்தில் அதை அடித்துத்துரத்த முனைந்த வீரங்கொழித்த முதிய தமிழ் மகனாரின் வீர உரைகள்தாம் மேலே காண்பன. ஒரே நாளில் பல கூட்டங்களில் அவர் பேசுவார். பல்லாயிரக்கணக்கான மக்கள் வெள்ளம்போல் திரண்டு பல மணிநேரம் அவர் பேச்சைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். பாரதியாரின் கல்வியும், கேள்வியும், தலைமைப் பொறுப்பும், வீடுபற்றி எரியும்போதுள்ள வீட்டவனின் மனநிலையைப் போல, கொதித்தெழுந்த உள்ளத்துடன் காட்டாறு போன்று தம் சொற்பெருக்கைக் காட்டச் செய்துவிட்டது. அக்காலத்திலேதான் (இந்தி எதிர்ப்புக்காலத்தில்) அவரது பேச்சின் முடிவைக் காண நேர்ந்தது இல்லை என்றால் ‘தசரதன் குறையும் கைகேயின் நிறையும்’ என்னும் அவரது வழக்காடுந் திறமைக்குத் தக்க சான்றாக உள்ள நூலையோ ‘தமிழன் மூளை’ என்று எழுதிய கட்டுரையாளருக்குப் பாரதியாரின் ஆணித்தரமான பதிலையோ நாம் எப்படி எதிர்பார்க்கமுடியும்? முதுமையை நெருங்கிக் கொண்டு இருந்தாலும் கூட பாரதியாரின் பேச்சிலே முடுக்குத் தளரவில்லை. அவரது தோற்றத்தின் கபீரம் குறையவில்லை. அவருடைய பேச்சுகள் சுருக்கெழுத்து எடுக்கப்பட்டு நூல் வடிவாகக் கொடுக்கப்படுமேயானால் ஆயிரக்கணக்கான மக்கள் படித்துப் பயன்பெறமுடியும்; அவரது அழுத்தந் திருத்தமான நல்லுரைகளை அறியமுடியும்.

3. ஈ. வெ. ராமசாமி

> **"பெசண்ட் அம்மையாரின் தலைமயிர்; பர்னாட்ஷா வின் தாடி; தாகூரைவிட அழகான உருண்டை முகம். ஒரு தனியான முகவெட்டு, என்னமோ ஒரு விதமான கவர்ச்சி"**

இந்த அழகான படப்பிடிப்புக்கு உரியவர்தான் ஈ. வெ. ராமசாமி. தமிழ் நாட்டில் அரசியல் உணர்ச்சியைக் கிளப்பிய மூவர்களில் ஈ. வெ. ரா.வும் ஒருவர் என்பதை யாரும் மறுக்க முடியாது. மற்ற இருவர்களும் அரசியல் வானிலிருந்து மறைந்து இருக்கின்றனர்; மறைத்தும் வருகின்றனர் பலர். ஆனால் இன்றுவரை ஈ. வெ. ரா. மறைக்க மறைக்க தலை தூக்கி வந்திருக்கிறார். இனியும் வருவார் என்பதற்கு யாதொரு ஐயமில்லை.

தென்னாட்டுத் தலைவர்களில் நீண்டநாளாகத் தலைவராக விளங்கி வருபவர் மட்டுமல்ல ஈ. வெ. ரா. ஒரு சிறந்த தமிழ்ப் பேச்சாளரும் ஆவர்.

அவருடைய கெழுதகை நண்பர் திரு. வி. க.வின் மதிப்புரையைக் கீழே தருகிறேன்.

> **"அவர் (ஈ. வெ. ரா.) பேச்சில் கருத்துச் செலுத்திய பின்னர் தமிழ் நாட்டுக் காளமேகமானார். நாய்க்கர் பேச்சு மழையாகும்; கன மழையாகும்; கல் மழையாகும். மழை மூன்று மணி நேரம் நான்கு மணி நேரம் பொழியும்."**

ஈ. வெ. ரா. வின் பேச்சு, கொச்சையாக இருந்தாலும் மக்களின் உணர்ச்சியினைத் தட்டி எழுப்புவதிலோ,

ஆழ்ந்த கருத்துக்களைத் தெரிவிப்பதிலோ, அஞ்சாமல் வாதிப்பதிலோ மற்ற பேச்சாளர்களுக்கு அவர் பின் வாங்குபவர் அல்ல.

மற்ற பேச்சாளர்கள் எடுத்துக் கூறுவதற்கு அஞ்சுகின்ற கருத்துக்களை, ஒரு சிறிதும் கவலைப்படாமல் அள்ளி அள்ளி வீசுகின்றார் ஈ. வெ. ரா.

இளம் உள்ளங்களுக்கு மிகவும் பிடித்தமான பகுத்தறிவு உணவு ஈ. வெ. ரா. வின் பேச்சில் செறிந்து கிடப்பதால் காளையின் கூட்டங்களுக்கு என்றும் குறைவே இல்லை. தென்னாட்டுச் சீர்திருத்தக்காரரும் "வைக்கம் வீரரு"மான ஈ. வெ. ரா. வின் சீர்திருத்தப் பேச்சைக் கேட்போம்.

> "எந்த எந்தக் காரணங்களால் உண்மையான சீர்திருத்தம் வெற்றி பெறவில்லையோ, என்ன என்ன சாதனங்கள் அச்சீர்திருத்தத்திற்குத் தடையோ அவைகளை வேருடன் அழிக்கத் தயாராயிருக்க வேண்டும். அவைகளில் ஒரு சிறு தூரையாவது கிளை வேரையாவது மீத்துவைத்துக் கொண்டு சீர்திருத்தம் செய்யலாமென்று எந்த விதமான சீர்திருத்தக்காரர்கள் நினைத்தாலும் அவர்கள் வெற்றி பெற மாட்டார்கள் என்பது எனது உறுதி ......
>
> "அன்னியர்கள் நம்மை மதிக்கமாட்டார்களே, பழிப்பார்களே எதிர்ப்பு பலமாய் விடுமே என்கிற பயமும் பலக் குறைவும் யாரிடத்தில் இருக்கிறதோ அவர்கள் ஒருக்காலமும் உண்மையான சீர்திருத்தத்திற்கு உதவமாட்டார்கள். அக்குணங்களுடன் கூடியவர்களால் நடைபெறும் சீர்திருத்தம் ஒருக்காலமும் பயனளிக்கவே முடியாது; அன்றியும் சீர்திருத்தம் செய்பவர்கள் எவ்வித கட்டுப்பாட்டிற்கும் ஆளாயிருத்தல் கூடாது. சீர்திருத்தத்திற்கு விரோதமான கட்டுப்பாடுகளையெல்லாம் உடைத்தெறிவதைக்

கைக்கொள்வதுதான் சீர்திருத்தத்திற்கு முதன்மையான பாதை யாகும். கட்டுப்பாடுகளுக்கு அடங்கிய சீர்திருத்தம் என்பது அதுவும் நம்நாட்டைப் பொறுத்தவரை சிறிதும் பயனற்றது.''

பழமையில் மிகநாட்டங் கொண்டுள்ள நம் தாயகத்தில் மூடப்பழக்க வழக்கத்தை ஓட்ட வேண்டுமாயின் மேற்கூறிய முழு சீர்திருத்தந்தான் "அருமருந்து ஒரு தனி மருந்து." அதைவிடக் கால், அரைக்கால் சீர்திருத்தங்கள் எல்லாம் கடைக்கால் உறுதியற்ற வீட்டைத் தட்டிப் பூசும் மேல் பூச்சு வேலைதான். பழங்காலச் செயல்களுக்கு எல்லாம் போலி வாதங்கள் கூறிப் 'புதுமெருகு' தீட்டுபவர்கள் தம் உள்ளங்களில் இதைச் சற்று ஆழப்பதிந்து கொள்வார்களாக.

"பெண்கள் அடிமை நீங்க வேண்டுமானால் முதலாவதாக அவர்களைக் கற்பு என்னும் சங்கிலியில் கட்டிப் போட்டிருக்கும் கட்டை உடைத்தெறிய வேண்டும். கட்டுப்பாட்டிற்காகவும், நிர்ப்பந்தத்திற்காகவும் கற்பு ஒரு காலமும் கூடாது! கூடாது!! கூடவே கூடாது!!! வாழ்க்கை ஒப்பந்தத்திற்காகவும், காதல் அன்பிற்காகவும் இருவர்களையும் கற்பு என்னும் சங்கிலி எவ்வளவு வேண்டுமானாலும் இருக்கிக் கட்டட்டும். அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஒரு பிறவிக்கு ஒரு நீதி என்கின்ற கற்பு மாத்திரம் அடிமைப் படுத்துவதில் ஆசைகொண்ட, மூர்க்கத்தனமே அல்லாமல் அதில் கடுகளவு யோக்கியமும் நாணயமும் பொறுப்பும் இல்லவே இல்லை,

இந்த விஷயங்களில் பெண்களுக்கு ஆண்கள் உதவி புரிவார்கள் என்று எதிர்பார்ப்பது வீண் வேலையே யாகும். வீரப்பெண்மணிகள் தாங்களாகவே தான் முன் வந்துழைக்க வேண்டும்.........பழக்கத்தையோ, மதத்தையோ, வேதத்தையோ, சாஸ்திரத்தையோ கருதிக் கொண்டு பயப்பட்டு விடாதீர்கள், காலதேச வர்த்தமானத்

தைப் பாருங்கள். துருக்கியையும் ஆப்கானிஸ்தானத்தையும் சைனுவையும் பாருங்கள். துருக்கியப் பெண்களின் கண்களுக்கும் சீனப் பெண்களுடைய கால்களுக்கும் விடுதலை ஏற்பட்டு விட்டன என்பதை நினையுங்கள்.''

"கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை'' என்ற சுருக்க உரையைத் தெரிந்துகொள்ளாமல், அது பெண்களுக்குத் தான் உரியது; ஆண்கள் (மனிதர்கள் மட்டுமல்ல; கடவுளர்களும் கூட) இரண்டு மூன்று பெண்களைத் தேவைகளுக்குமேல் வைத்துக்கொள்ளலாம் என்ற அறியாமையைப் பாதுகாத்துக்கொள்ள "கற்பு'' எனும் திரையிட்டுக் காத்துவருகின்றனர். இத்திரையை நீக்கி உண்மையான கற்பு நிலவ வழிகோலும் ஈ. வெ. ரா. வின் சீர்திருத்தப் பேச்சுத்தான் மேலே கண்டது.

"தமிழ்நாடு தமிழர்க்கே'' என்ற உரிமை முழக்கத்தின் விளைவால் "தமிழ் நாட்டில் தமிழ் இசை'' என்ற கிளர்ச்சி ஏற்பட்டு வெற்றியடைந்துள்ளது. ஆனுல் இவ் வெற்றியால் நாட்டின் எழுச்சி மிகுந்துள்ளதா? ஒன்றும் அறியா ஏழைமக்கள் இசைவழியால் உண்மை நிலையை உணர்ந்தார்களா? தமிழ் இசைக்கிளர்ச்சிக்குத் தூண்டுகோலாய் இருந்த ஈ. வெ. ரா. கூறுவதைக் கேளுங்கள்.

"தமிழிசைக் கிளர்ச்சிக்காக இவர்கள் (சர். சண்முகமும், அண்ணுமலை செட்டியாரும்) செலவழித்த பொருளும், மற்ற தமிழ் மக்கள் செலவழித்த பொருளும், தமிழ் நாட்டுப் பொருளல்லவா, தமிழர்களுடைய பொருளல்லவா? நிலை குலைந்து தரித்திரர்களாய், வயிற்றுப் பசிக்கு எச்சிற் கலையைத் தேடித்திரியும் ஈனமக்களாய்க் கருதப்படும் தமிழ் உயிர்களுடைய செல்வமல்லவா? இதற்குச் செலவழித்த உணர்ச்சியும், ஊக்கமும் ஆற்றலும் காலமும்கூட இவர்க

ளுடையது அல்லவா என்று கேட்பதற்கு மன்னிக்க வேண்டுகிறேன்.

இவ்வளவு பொருளும் ஆற்றலும் மதிப்பும் மற்றதும் செலவழித்ததற்கு நாம் கண்ட பயன் என்ன? நண்பர்களே! சிந்தித்துப் பாருங்கள். நாட்டிலுள்ள நல்ல, உயர்தர இசை வாணர்களுக்குப் பொருள் தந்து வரவழைத்து ஒரு காலைத் தூக்கி ஆடிக்கொண்டிருக்கும் நடராஜ உருவத்தின் முன் தீபதூப நைவேத்தியத்துடன் உட்கார வைத்து பல ஆயிரக் கணக்கான மக்களை வரவழைத்துப் பஜனைப் பாட்டுக்கள் பாடச் செய்வதும், அதன் மூலம் மக்களுக்குப் பக்தி புகட்டுவதும்தானா? இந்தப் பக்திக்காக ஏற்கெனவே நம் நாட்டில் இருந்துவரும் சாதனங்களும் முயற்சிகளும் செலவுகளும் மற்றவையும் போதாவா? இது யார் செய்யவேண்டிய காரியம்? எதற்காக இவர்களும் இந்தக் காரியம் செய்ய வேண்டும்? இதனால் ஏற்படும் பயன் யாருக்கு நலனைத் தரும்? நிலைகுலைந்து இழிவடைந்து தரித்திரர்களாய், மடையர்களாய், கீழ்மக்களாய், சுரண்டப்பட்டவர்களாய் வாழும் மக்களுக்கு இவை என்ன பலனைத் தரும்? அவர்கள் குறையைப் போக்கிக்கொள்ள ஏதாவது உணர்ச்சி ஏற்படுமா? அல்லது முயற்சியைத் தடுக்குமா? மறுமுறையும் சிந்தித்துப் பாருங்கள்—இதில் பொருளாதார ஞானம் இருக்கிறதா, சீர்திருத்த ஞானம் இருக்கிறதா என்று! பஜனைப் பாட்டுகள் தமிழில் இருந்தால் என்ன, தெலுங்கில் இருந்தால் என்ன, இந்தியில் இருந்தால் என்ன? அல்லது ஜப்பான் ஜர்மனி மொழியில் இருந்தால் என்ன? கடவுளுக்கு எந்த மொழி தெரியாது!

.........நாட்டு மக்களுக்கு இதில் பிரவேசித்து இந்தத் தன்மானத்துக்குக் கேடு செய்யும் தன்மையைப் பற்றிச் சிந்திக்கவோ, விளக்கவோ, தடுக்கவோ உரிமை யில்லையா என்று கேட்கிறேன்......

தமிழிசைக் கிளர்ச்சிக்குச் செலவாகும் பணத்தையும் நேரத்தையும் ஊக்கத்தையும் பார்த்தால் அதன் பயன்

இந்தப் பஜனையில் முடிவசானல், மானமும் அறிவும் உள்ள எவனுக்குத்தான் வயிறு எரியாது......"

தமிழர் என்றால் இந்துக்கள் என்று பொருளல்ல! மகம்மதிய, கிறிஸ்தவ, இந்து மதத்தைத் தழுவி வாழும் மக்கள் அனைவரும் தமிழர்தான். இவர்கள் அனைவரும் சேர்ந்து நடத்திய கிளர்ச்சிதான் தமிழ் இசை இயக்கம். தமிழ் அரங்கில் இந்துமதக் கடவுள் சின்னமான நடராசரை வைத்து பூசிப்பது, ஒற்றுமைக்கு வழி தேடாமல் மதப் பூசலுக்கு இடங்கொடுப்பதாகும். சாதி சமயங் கடந்த ஓர் இயக்கத்தை சாதி சமயத்துக்குப் பயன்படுத்திக்கொள்வது அறியாமை; வேற்றுமைக்கு வித்திடும் கொடுஞ் செயலாகும். மேலும் இசை கடவுளை மட்டும் பூசிப்பதற்கு பயன்படும் கருவியல்ல. தமிழர்களின் இன்றைய தாழ் நிலையையும் அவர்கள் உயர்வதற்கு வேண்டிய வழிகளையும் எடுத்துக் கூறும் கருத்துக்கள் பதிந்த பாடல் மூலம் உணர்வையும் உள்ளத்தையும் தட்டியெழுப்பக்கூடிய ஆற்றல் வாய்ந்த ஓர் அரிய துறை. எனவே இத்துறையை வருங்கால வாழ்விற்குப் பயன்படுத்தாததைக் காணும்போது அதன் உயர்விற்கு உழைத்த உழைப்பாளர்களின் மனம் கொதிப்படையாமல் மங்கியா இருக்கும். எனவே தான் ஆத்திரங்கலந்த பெருமூச்சு ஈ. வெ. ரா. விடம் இருந்து வெளிவந்துள்ளது. தமிழ் இசைபோக்கைக் காரணத்தோடு கண்டிக்கும் புத்துலகச் சிற்பி ஈ. வெ. ரா. வை 'இசை பிடிக்காத ஔரங்சீப்' என்றார் ஓர் ஆசிரியர். என்ன அறியாமை!

இனி தொழிலாளர் இயக்கத்தை நடத்துபவர் எப்படிப்பட்டவராக இருக்கவேண்டும். தொழிலாளிகள் எதைப்பெற முயலவேண்டும் என்பதற்கும் ஈ. வெ. ரா. வின் கருத்தை அறிவோம்.

"செல்வம் கடவுள் கொடுத்தார். தொழிலாளி களைக் கடவுள் சிருஷ்டித்தார். கடவுள் செயலால், இது இரண்டும் சிருஷ்டிக்கப்பட்டு காப்பாற்றப்பட்டு வருகிறது. பிச்சை யெடுப்பது அவன் தலைவிதி!' என்று நினைப்பவர் தொழிலாளர் இயக்கத்தில் அங்கத்தினராய் இருக்கவோ, தொழிலாளர் இயக்கத்தை நடத்தவோ சிறிதும் தகுதியற்றவர் என்றே சொல்லுவேன். அவர் எவ்வளவு பண்டிதராய் இருந்தாலும், பக்தராய் இருந்தாலும் தொழிலாளர் இயக்கத் திற்குப் பதரே; எதிரியே யாவர்."

"இன்று நீங்கள் வேலை நிறுத்தம் செய்திருக் கிறீர்கள். இதை நாங்கள் முழுமனதோடு ஆதரிக்கிறோம், ஆனால் கூலி உயர்வுக்குச் செய்யும் வேலை நிறுத்தத்தை நாங்கள் அவ்வளவு முக்கியமானதாகக் கருதுவதில்லை. ஏனெனில் அது தொழிலாளிகளைத் தொழிலாளர்களாகவே இருக்க வைக்கும் வேலை என்பது எங்கள் கருத்து. ஏன் என்றால் தொழிலாளிக்கு அதிக கூலியும், வீடு வைத்தியம், படிப்பு வசதியும் முதலாளி செய்வது என்பது, ஒருவன் தன் மனைவியை எப்போதும் அடிமையாய் அடைத்து, தனது நலனுக்கு வைத்திருப்பதில் அவளை அந்தக் காரியத்தில் உற் சாகமூட்டி நல்ல பக்தி விசுவாசமுள்ள அடிமையாகச் செய்ய—தங்க வைர நகை, பட்டுச்சேலை, சீப்பு, சோப்பு கண்ணாடி, வாசனை எண்ணெய், பவுடர் வாங்கிக் கொடுப் பது போலவே தவிர, சம உரிமை அடைவதற்கு அல்ல என்பது போலவேயாகும்.

தொழிலாளிக்கு வேண்டியது கூலியும்; நல்வாழ்க் கை வாழச் செலவுமே அல்ல என்பதை ஒவ்வொரு தொழி லாளியும் கவனத்தில் வைக்கவேண்டும். அவனுக்கு வேண் டியது தொழிலின் பயனைச் சம உரிமையுடன் அனுபவிக்க வேண்டும் என்பதோடு, தான் அந்த இயந்திர சாலைக்கு ஒரு கூட்டாளியாக—பங்காளியாக—இருக்க வேண்டுமே ஒழிய ஒரு தொழிலாளியாக வேலைக்காரனாக இருக்கப்படாது என்ப தேயாகும்......

பணத்தைப்போட்டு யந்திரம் வாங்கி தொழிலாளி யைப்போட்டு வேலை செய்தால் தானே லாபம் வருகிறது? இந்த லாபத்தில் பெரும்பாகம் வேலைக்குத்தானே கிடைக்க வேண்டும்? முதலுக்குச் சிறுவட்டிதானே கிடைக்கவேண் டும்? அதுவும் "மிஷினு"க்கு எண்ணெய் போடுவது எப் படியோ, 'எஞ்சினு'னுக்கு விறகு போடுவது எப்படியோ அதுபோல் அசல் வேலை செய்பவருக்கும் அந்த மனித மிஷின் கெடாமல் எண்ணெயும் விறகும்போல் நல்ல சாப் பாடும், நல்ல சுகமும் கொடுக்கவேண்டியது இயற்கை தர்ம மாகும். ஆகவே நிர்வாகஸ்தன் சம்பளம், முதலுக்கு வட்டி, மிஷினுக்கு எண்ணெய் விறகு என்பன போல் தொழிலாளிக் கும் வாழ்க்கைச் சௌகரியம் கொடுத்துவிட்டு மீதி உள்ள லாபத்தில் மிஷின் தேய்மானத்திற்கு ஒரு தொகை ஒதுக்கு வதுபோல் தொழிலாளியின் ஓய்வு கால நல்வாழ்க்கைக்கும் ஒரு தொகை ஒதுக்கி வைத்துவிட்டு, மீதியையே முதலும் வேலையும் பங்கிட்டுக் கொள்ளவேண்டும். நாளா வட்டத்தில் யந்திரசாலை தொழிற்சாலைகள் தொழிற் செய்பவர்களுக்கு சரிபாக சொந்தமாக ஆகவேண்டும்."

இவ் ஆய்வுரைகளை என்று தான் உலகம் ஏற்குமோ? தொழிலாளி-முதலாளி தகராறு ஒழியுமோ?

பலர் கிராமச் சீர்திருத்தத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். 'நாட்டுப்புறத்திற்குப் போகுங்கள்' என்று கட்டுரைக்கின்றார் கள். கிராமத்தைப் பற்றி ஈ. வெ. ரா. வின் எண்ண மென்ன? அறிவோம்.

"கிராமம் என்பது தீண்டப்படாத மக்கள் நிலை யில்தான் இருந்து வருகிறது. கிராமத்தார் அல்லாத மற்றவர் களுக்கு உழைப்பதற்கு ஆகவே இருந்து வருகிறது. இந்த நிலையில் கிராமத்தை எவ்வளவு சீர்திருத்தினாலும் கிரா மம் "சூத்திரன், தீண்டாத - ஜாதியான்" நிலையில்தான் இருக்கும்.

எனவே சமுதாய மக்கள் மனிதத் தன்மைபெற வேண்டுமானால் பிராமணன் என்று ஒரு ஜாதியும், பறையன் என்று ஒரு ஜாதியும் அடியோடு இல்லாமல் மனிதன் என்கிற ஜாதிதான் இருக்கவேண்டும் என்று எப்படி கருதுகிறோமோ, அதுபோல், ஊர்களிலும் பட்டணம் நகரம் என்று சில ஊர்களும் கிராமம் குப்பைக் காடு என்று பல ஊர்களும் இல்லாமல் பொதுவாக ஊர்கள்தான் இருக்கவேண்டும்......

உண்மையில் கிராமங்களின் கஷ்டங்களை மாற்ற வேண்டுமானால் நான் சொல்லப்போகும் முக்கியமான காரியங்களைச் செய்யவேண்டும். விவசாயம் உடலுழைப்பில் நடைபெறுவதை மாற்றி அதை ஒரு தொழில் முறையாக, அதுவும் இயந்திரத்தொழில் முறையாக (Industrial) ஆக்கப் படவேண்டும்.

உழுவதும் விதைப்பதும் அறுப்பதும் இயந்திரத் தால் செய்யப்படவேண்டும். கிணறு வெட்டுவதும் தண் ணீர் இறைப்பதும் பாய்ச்சுவதும் இயந்திரத்தில் செய்யப் படவேண்டும்.

அந்த அளவுக்குப் பூமிகளைத்திருத்தி இணைக்க வேண்டும். அதற்கு பயன்படாத பூமியைத் தனிப்படுத்தி, அடிக்கடி பாடுபடவேண்டிய அவசியமில்லாத பயிர் செய்ய வேண்டும்.

விளைபொருளால் ஆக்கப்படும் பண்டங்கள் ஆங் காங்கே விவசாயிகளால் கூட்டுறவு முறையில் ஆக்கப்பட்டு அந்தப் பயன் விவசாயிகளுக்குக் கிடைக்கவேண்டும்.

பல கிராமங்களை ஒன்றாக இணைத்து ஒரு சிறு நகரமாக ஆக்கி அதில் பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, "பார்க்கு" சினிமா, டிராமா, தமாஷ் அறை, வாசகசாலை, புத்தகசாலை, ரேடியோ நிலையம், நல்ல ரோட்டு, கால அளவுப்படி போக்கு வரத்துள்ள பஸ் ஸ்டேஷன், போலீஸ் ஸ்டேஷன், நன்றாய்ப்

படித்த ஒரு நீதிபதி, சகல சாமானுங் கிடைக்கத்தக்க கடைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்......

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானல் அதை நகரத்தார்கள், தரகர்கள் சுரண்ட முடியாமல் செய்யவேண்டும். 'நகரத்தாருக் காகத்தான் அவர்கள் வாழ்கிறார்கள்; வாழ வேண்டும்' என்று சொல்லப்படுவதை அடியோடு மாற்ற வேண்டும்.'

இத்தகைய தீவிரமான கருத்துக்கள் கொண்டிருப்பதனால்தான் 'முரட்டுப் போக்கு படைத்தவர்' என்று பலர் அவரைத் தூற்றுகிறார்கள். மற்ற நாட்டாரோடு ஒத்தநிலையில் வாழவேண்டும் (வாழ எல்லா வகையான அடிப்படையான பொருள் இருக்கும்போது) என்ற உயர் நோக்கங் கொண்டுள்ள அவர், பிற்போக்கு நிலையில் உள்ள இன்றைய சமுதாயத்தின் பார்வையில் ஒரு "எதிர் நீச்சுக்காரர்" ஆகத்தோற்றமளிக்கிறார்.

கூட்டத்தை வீரமடையச் செய்யவேண்டுமா, கொதிப்படையச் செய்யவேண்டுமா, துக்கமடையச்செய்யவேண்டுமா இன்னும் என்னென்ன செய்யவேண்டுமென்று நீங்கள் நினைக்கின்றீர்களோ அவற்றையெல்லாம் செய்யவல்லவர் ஈ. வெ. ரா.

சிறந்த நூல்களை விடாமல் படித்துக்கொண்டிருந்தால் தான் புதிய புதிய கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைக்க முடியும் என்னும் பொதுவியல்பிற்கு ஏற்றவாறு நடக்கின்ற பேச்சாளர்களுக்கு எதிர்மாறான குணம் படைத்தவர் ஈ. வெ. ரா. அவர் படித்த படிப்போ குறைவு. ஆயினும் அவர் பாரதி தாசன் சொல்வது போல்,

"வயதில், அறிவில் முதியார் - நாட்டின்
வாய்மைப் போருக்கென்றும் இளையார்;
உயர் எண்ணங்கள் மலரும் சோலை"

யாக இருக்கின்றார்.

ஆண்டு பல கழிந்துங்கூட அவர் அறிவு தடைபடாமல் ஊற்றெடுத்துப பெருகி ஓடுகிறது. அஞ்சாமையும் ஆண்மையும் இணைந்து பல மணிநேரம் அலுக்காமல் நின்று கொண்டே பேசச் செய்கிறது.

இலக்கிய எடுத்துக்காட்டுகளை அவரது பேச்சிலே நாம் காணமுடியாதென்றாலும் பாமர மக்களுக்கு விளங்கும் பழமொழிகளையும் தொடர் மொழிகளையும் நாம் காணமுடியும். 'கருத்தைத் தெரிவிப்பதற்கு மொழியே அன்றி மொழியைத் தெரிவிப்பதற்காகக் கருத்தல்ல' என்ற கொள்கை யுடையவர் ஈ. வெ. ரா.

அவரது தனிச்சிறப்பு எது? ஆயிரக்கணக்கான கூட்டங்களில் நமது தாழ்வைக் குறித்தே பேசி வருகின்றார். வெறுப்புக் கொள்ளாமல் இன்னும் மக்கள் கேட்டுக்கொண்டே இருக்கின்றார்கள். எவ்வளவுக்கு எவ்வளவு கேள்விகள் கேட்கப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அவரது பேச்சின் ஓட்டமும், உயர் கருத்தும் மிளிரும்.

கேள்விக்கேற்ற சுருக்கமான பதிலை, படித்த உடனே சிறிதும் தயங்காமல் அவர் கூறுகின்றார். அவரது சுருக்க பதில்களில் தான் எவ்வளவு நுட்பமதி; கிண்டல்!

'கைப்பிடி அளவுள்ள' உள்நாட்டு வைதீகத்தை அடக்கி ஒடுக்குவதற்கு இதுவரை யாரும் பாரா முகமாய் இருந்

ததினால்தான், ஈ. வெ. ரா. அதன் பாழும் எண்ணத்தை வெட்ட வெளிச்சமாக்கி அதை வீழ்த்திவிட பாடுபட்டு வருகின்றார். சிலர் சொல்வதுபோல் இது 'அசட்டுத் தாயின் மனோபாவ' மல்ல. எல்லாத் துறையிலும் முன்னேறவிடாது தடுக்கும் அதன்பிடி, இறங்கிவரும் ஏகாதிபத்திய பிடியினும் மறைந்து மறைந்து மாற்றுருவங்கொண்டு சுரண்டிவரும் 'இரும்புப்பிடி' யாகும். இதை அறிந்தும் சிலர் 'அசட்டு' வாதங்களைக்கூறி ஈ. வெ. ரா.வை வகுப்புவாதியாக சித்தரிப்பதில என்ன மாயம் இருக்கிறதோ?

ஈ. வெ. ரா.வின் பேச்சிலே குறுகிய மனப்பான்மை இருக்கின்றதென்று குற்றஞ்சாட்டுகின்றவர்கள்கூட, மக்கள் உயர்வு தாழ்வு இன்றி வாழவேண்டுமென்ற பெருநோக்கும், உலகநோக்கும் நிரம்பப்பெற்ற கருத்துரைகள் உள்ளடங்கி இருப்பதை மறுக்க முடியாது.

இன்று அவர் வகுப்புவாதியாகப் பலருக்குத் தென்படலாம். அரசியலில் பிற்போக்குக் கட்சியைச் சேர்ந்தவராகவும் நினைக்கலாம். சூழ்ச்சியும், தந்திரமும் தெரியாத தலைவராகவும் காணப்படலாம் "தமிழ் நாடு" என்று முன்பும், "திராவிட நாடு" என்று இன்றும் கூறிக்கொண்டு அணைப்புக்குப் பிடிபடாமல் ஓடிக்கொண்டே இருப்பவராகவும் 'கூர்த்த மதியின' ருக்குப் படலாம். ஆனால காலம் மாறி, திரை விலக்கப்பட்டு, அறிவு வெள்ளம் பெருக்கெடுத்துவரும்போது-குள்ள மனது ஒழிந்துபரந்தபார்வை ஏற்படும்போது—அவரது பெருமை தூய கண்ணாடியில் தெரியும் உருவம் போன்று காட்சி யளிக்காமல் போகாது.

ஒரு நூற்றாண்டு கழித்து பிறக்கவேண்டிய அவர், தன்னுணர்வு பெறாத இந்நாட்டில் முன்னதாகத் தப்பிப் பிறந்துவிட்டார். எனவேதான் வசவும், கவனிப்புக் குறைவும் பரிசாகப் பெறுகிறார். இருந்தாலும் பேச்சுத் துறையைப் பொறுத்த மட்டில் ஆழ்ந்த கருத்துரைகளை அவர் கூறுவதால் சாக்கரட்டீஸ்; சமுதாயப் புரட்சியைக் காண விழைவதால் ரூசோ. அவர் ஒரு புத்துலகச் சிற்பி என்பதை இன்று இல்லாவிட்டாலும் நாளையாவது உணராதா 'இப்பாழும் உலகம்'!

4. ரா. பி. சேதுப்பிள்ளை

தமிழ் இலக்கியச் சுவையை நாடு முழுவதும் தம் சொற்பெருக்கால பரப்பிவரும் அன்பர்களில் தலைசிறந்தவர் ரா. பி. சேதுப்பிள்ளை.

கருமையான நிறத்துடன், சிறுது வழுக்கை விழுந்த உறுதியான தலையுடன், அழகான அடுக்குத் தொடர்களோடு இணைந்த எதுகை மோனை கலந்த வாக்கியங்களை மிக உயர்த்தலும் தாழ்த்தலும் இல்லாத நடுத்தரக் குரலுடன், எடுப்பான தோற்றத்துடன் அடிக்கடி தம் சட்டையைப் பிடித்துக்கொண்டும் பேசும் அன்பர் வேறுயாருமல்ல, நம் "சொல்லின் செல்வர்" ரா. பி. சேதுப்பிள்ளைதான்.

தமிழ் என்றாலோ தமிழ்ச் சுவடிகள் என்றாலோ இலக்கியங்கள் என்றாலோ தெரியாதவர்களும், தெரிந்தும் பிடியாத

வர்களும் சேதுப்பிள்ளையவர்களின் பேச்சுத் திறமையைக் கண்டு வியந்து ஈ மொய்ப்பது போல் இன்று திரண்டு வரு கின்றனர். சேதுப்பிள்ளை பேச்சு எங்கு நடந்தாலும் அதற் காகப் பலர் 'ஓடோடிச் செல்ல'த் தயங்காமல் இருக் கின்றனர்.

ஆங்கில அறிவோடு தமிழ் இன்பத்தை அவர் வாரி இறைக்கும்போது தென்றலும் தீம்பலாவும் தெவிட்டும். அவ்வளவு இனிமையாக இருக்கும்!

அவர் திருக்குறளைப்பற்றிப் பேசுவார். அதில் கம்ப ராமாயண சிலப்பதிகார மேற்கோள்களை எடுத்துரைப்பார். சிலப்பதிகாரத்தைப் பற்றிக் கூறும்போது திருக்குறளும், கம்ப ராமாயணப்பகுதிகளும் வந்தே தீரும். கம்ப ராமா யணத்தை எடுத்துச்சொல்லும்போது மற்ற இரண்டும் வரவே வராது என்று யார் சொல்ல முடியும்? ஒன்றில் மற் றொன்று உருண்டோடி வரும்; குதித்துவரும். இதுதான் சேதுப்பிள்ளை பேச்சின் அழியாச் சிறப்பாகும்.

கம்பராமாயணத்திற்கு இன்று தமிழகத்தில் பேரும் புகழும் கிடைக்கப் பாடுபட்ட பெரும்பங்கு திரு. ரா. பி. சேதுப்பிள்ளையைத்தான் சேரவேண்டும். கம்பராமாயண மதுவைக் கலித்தீர உண்டு சுவைத்துள்ள கோத்தும்பி ரா. பி. சேதுப்பிள்ளை. இதில இவருக்கு இணை வேறு எவரைச் சொல்ல முடியும்?

"மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங்கியானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டே னரசோ டொழிப்பேன்......"

என்ற பகுதியை அவர் பல தடவை திருப்பித் திருப்பிச் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். எனக்கு (எனக்கு மட்டு மென்ன கேட்ட அனைவருக்குந்தான்) அது தெவிட்டாத் தீஞ் சுவையாக இருக்கிறது. அதோடு வீரத்தோடு அவர் சொல் லும் முறையும், அழுத்தந்திருத்தமாகச் சொல்லைச் சொல் லும் வகையும், கண்ணகியே நேரில் வந்து சூள் உரைப்பது போல் தென்படும்.

இதுபோன்ற பகுதிகளை மீண்டும் மீண்டும் அவர் சொன்னாலும் நமக்கு புளிக்கப்போகிறதா என்ன? நாட்டில் நல்ல 'தமிழ் சொக்குபடி' தூவி வருகிறார் சேதுப்பிள்ளை.

சிறந்த பேச்சாளர்க்குப் பேச்சில தொடர்ச்சி இருக்க வேண்டும். உணர்ச்சி வயப்பட்டு சிற்சில சமயங்களில் சேதுப்பிள்ளைக்கு சோர்வை தடைப்பட்டாலும், தமிழ்ப் பண்பாட்டு முறைபடி பேச்சு அமைந்து இருக்கும் என் பதை நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை. கூட்டத் தின் மனநிலைக்குத் தகுந்தபடி சுருக்கமாகவோ விளக்க மாகவோ அவர் பேசுகிறார். நல்ல உச்சரிப்போடு நிறுத்தவேண்டிய இடத்தில் நிறுத்தியும் உயர்த்தியும் தாழ்த்தியும் மொழியும் அவர் திறனை ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும்.

"......மாநாட்டிலே தமிழ்த்தாயின் மணிக்கொடி ஏறக்கண்டேன்; மனம் களித்தேன். வில்லும் கயலும் வேங்கையும் தாங்கிய மணிக்கொடி முத்தமிழ் வளர்த்த மூவேந்தரையும் நம் மனக் கண்ணெதிரே காட்டி நிற் கின்றது. அன்பர்களே! இன்று நாம் அனைவரும் அரசியல் வானத்தையே நோக்கி நிற்கின்றோம். சென்ற ஆண்டிலே விடிவெள்ளி தோன்றிற்று; இன்று கிழக்கு வெளுத்து

விட்டது. இதுவரை மேற்கு நோக்கிய முகங்கள் எல்லாம் இன்று கிழக்கு நோக்கி நிற்கின்றன...... தமிழ்நாடு தன்னரசு பெறும்—தமிழரசு பெறும் என்று எண்ணும் பொழுது தமிழர் உள்ளம் துடிக்கின்றது. தமிழ்த்தாய் முன்னாளில் எய்தியிருந்த ஏற்றமும் தேற்றமும் அலை அலையாக மனத்தில் எழுகின்றன......"

தமிழாசிரியர் மாநாட்டின் தலைமை உரையில் அவரது உள்ளக் களிப்பைக் கண்டோம். களிப்பின் எதிர் சாயலையுங் காண்போம்.

"மூவேந்தர் காலத்திற்குப் பின்பு நம் தாய்மொழி அடைந்த சிறுமையை நினைத்தால் நெஞ்சம் உருகும். வேற்றரசர் ஆட்சி இந்நாட்டில் வேரூன்றிற்று. அவர் மொழியாகிய ஆங்கில மொழி ஆதிக்கம் பெற்றது. எல்லாப் பாடங்களும் ஆங்கில மொழியிலே பயிற்றப்பட்டன. தமிழ் மயமாயிருந்த கல்லூரிகளெல்லாம் ஆங்கில மயமாயின. ஆங்கில மாது களிநடம்புரிந்த கல்விச்சாலைகளில் தமிழ்த்தாய் நிலையிழந்து, தலைகவிழ்ந்து, ஒடுங்கி ஒதுங்கி நிற்பாளாயினாள். தமிழ் ஆசிரியர்களின் உள்ளம் இடிந்தது; ஊக்கம் மடிந்தது; புகைபடிந்த ஓவியம்போல் புலவர்மணிகள் பொலிவிழந்தார். தமிழ் மாணவர்களும் தமிழை எள்ளி, நகையாடத் தொடங்கினர். அல்லும் பகலும் ஆங்கிலத்தைக் கற்று, ஆங்கிலேயரது நடையுடைகளில் மோகமுற்றுத் தாய்மொழியைப் பழித்தும் இழித்தும் பேசுவாராயினர். இவ்வாறு கட்டழிந்து பதங்குலைந்து கிடந்த தமிழ்நாட்டில் தமிழ்க்கலை விளக்கு அவிழ்ந்து போகாமல் பாதுகாத்தவர் தமிழாசிரியர்களேயாவர். மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, வறுமையும் கருதாது, அவமதிப்பும் கொள்ளாது, தமிழ்த்தாயின் பொன்னடி போற்றி நின்ற தமிழாசிரியரை இன்று மறக்கலாகுமோ?"

வருங்காலத் தமிழாசிரியரின் வேலைத் திட்டத்தைப் பற்றி அவர் கூறுவது :—

"இனி வருங்காலத்தில் தமிழ் ஆசிரியர்கள் செய்தற்குரிய சிறந்த வேலைகள் பல இருக்கின்றன. குடியரசாட்சியில் பேச்சுக்கும் எழுத்துக்கும் பெருஞ் சிறப்புண்டு. தமிழ் மேடையிலே நிகழும் பேச்சுக்களைச் சுருக்கெழுத்திலே எடுக்கும் கலையைத் தமிழாசிரியர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இன்று பத்திரிகையுலகம் பெரும்பாலும் தமிழ்ப் பேச்சுக்களை மதிப்பதில்லை; பிரசுரம் செய்வதில்லை. திருவள்ளுவர் முதலிய புலவருடைய நினைவு நாட்கள் திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றன. அவ்விழாக்களிலே பெரும் புலவர்கள் பேசுகின்றார்கள்; பல்லாயிரக்கணக்கான மக்கள் கேட்கின்றார்கள்; கிளர்ச்சி பெறுகின்றார்கள்; பயனடைகின்றார்கள் ஆனால் அந்நிகழ்ச்சிகளைப் பற்றித் தமிழ்நாட்டு ஆங்கிலப் பத்திரிகைகளில் விவரமாக ஒன்றும் காணமுடியாது. தமிழ்ப் பத்திரிகைகளிலும் சிலவற்றைத் தவிர மற்றவை ஏதோதானோ என்றுதான் அந்நிகழ்ச்சியை வெளியிட்டிருக்கும். இந்த நிலை மாறியே தீரவேண்டும். அதனை மாற்றும் ஆற்றல் தமிழறிஞரிடம் இருக்கின்றது. நாடெங்கும் தமிழ் மயமாக்கிவிட்டால் பத்திரிகைகள் தாமே தமிழிற் கவிந்துவரும். தமிழ்ப் பேச்சுக்களைப் பிரசுரம் செய்கின்ற பத்திரிகைகளைப் பெருவாரியாகத் தமிழ் மக்கள் ஆதரிக்கத் தலைப்பட்டால் இன்றுள்ள நிலை நாளையே மாறிவிடும்."

உள்ள மகிழ்ச்சியிலும், குமுறலிலும், அவர் இழுத்த இழுப்பிற்கு எல்லாம் வளைந்துவரும் சொற்களும், நீண்ட நாளாகத் தாழ்த்தப் பட்டிருக்கும் தமிழாசிரியர் கிளர்ச்சிக்கு இருட்டடிப்பு செய்துவரும் தமிழ்—ஆங்கிலச் செய்தித் தாள்களின் அறியாமையும் வருங்காலத்திற்குச் செய்ய

வேண்டிய விழுமிய பணிகளும், இதுவரை அவர் பேச்சைப் படித்ததிலிருந்து நமக்கு நன்கு விளங்குகின்றன அல்லவா ?

சென்னைப் பல்கலைக் கழகத்தில் மாற்றானுக்குத் தாள் பணியாமல் போராடும் அறிஞர் சேதுப்பிள்ளையிடமிருந்து —வழக்கறிஞரிடமிருந்து வழக்கறிவு பெற இளைஞர் உள்ளம் துடியாய்த் துடிக்கிறது. இதுவரை அவர் ஆற்றியுள்ள இலக்கியப் புராணச் சொற்பொழிவுகள் தமிழ் உணர்ச்சியைப் பெருக்கியுள்ளன. தமிழ் மக்கள் அறிவும் இன்று வேறு துறைநோக்கி போக முனைந்து உள்ளது. இந்தச் சூழ்நிலைக்கு எற்ப அரசியல், அமையப்போகும் குடியரசுக்கு வேண்டிய சட்டதிட்டங்கள்—இவற்றைப்பற்றி அறிந்து கொண்டு, உரிமை படைத்தவர்களாகத் தமிழர் விளங்க வேண்டாமா ?

அறிஞர் சேதுப்பிள்ளை இனிமேல் இத்தகைய துறைகளில் தம் பேச்சின் ஆற்றலைப் புலப்படுத்தி வருங்கால வாழ்விற்கு அடிகோல வேண்டும் என மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இவ்வேழைச் சொல் அம்பலம் ஏறுமா ?

5. ஔவை. சு. துரைசாமி

தமிழ்ப் புலவர்களிலே பேச்சுவன்மை மிக்கவர்களில் ஒருவராவர் ஔவை. சு. துரைசாமி அவர்கள். சிறந்த இலக்கிய ஆசிரியர்களில் ஒருவராகவும் அவர் இன்று திகழ்கின்றார். அவரது தோற்றத்தை முதன் முதலில் காண்கிறவர்களுக்குச் சிறந்த பேச்சாளராக எண்ணத் தோன்றாது. பண்டிதர் போன்றவர் என்றுதான் எளிதில் எண்ணிவிடுவர். ஆனால், அவர் பேசத் தொடங்கிவிட்டாலோ தமிழ்ப் பண்போடு கலந்துவரும் சொற்களாலும் கருத்துக்களாலும் பேசும் முறையினாலும் கேட்பவர் மனதைக் காந்தம்போன்று கவர்ந்து விடுவார். கேட்பவர் முதலில் தாம் நினைத்தது தவறு என்று கண்டு தெளிவர்.

பொதுவாக அவரது பேச்சு எளிமையும் இனிமையும் வாய்ந்ததாகவும், கருத்துக்கள் பொதிந்ததாகவும் இருக்கிறது. பேச்சின் ஊடே ஊடே வேண்டிய இடங்களில் இனிய இசையோடு பாடிப் பேசும் அவரது முறை அலுப்புத் தட்டாமல் இருப்பதற்கு மாற்றுத் தேடுவதாக அமைந்திருக்கிறது. அதிகமான கருத்துக்களால் எதைச் சொல்லாமல் இருப்பது என்று அவைக்கு அஞ்சும் கோழை அல்லர். அவர் இதற்கு மாறாகத் தமக்கு முன் பேசியவர்கள் அடிப்படையில் தவறாகப் பேசுவார்களே யானால், அவர் தம் உரை மிகத்தவறானது என்பதை ஒளிவு மறைவு இன்றிச் சுட்டிக் காட்டிக் கண்டித்து, பிறகு தம் பேச்சைத்தொடர்ந்து பேசுவார். அவரது பேச்சுக்கள் தாமே ஆய்ந்து ஆய்ந்து கண்ட ஆராய்ச்சி உண்மைகளை எடுத்துரைக்கும் சிறந்த சொல்லோவியங்களாகப் பெரும்பாலும் அமைந்துவிடுகின்றன.

அவர் 1924-ம் ஆண்டுமுதல் சங்க இலக்கியம், சைவத் திருமுறை, சித்தாந்த சாத்திரம் என்ற துறைகளிலே சொற்பொழிவு ஆற்றிவருகிருர். அழுத்தந் திருத்தமான அவரது பேச்சை அறிஞர்களும், மாணவர்களும் பெரிதும் விரும்புகின்றனர்.

ஔவை. சு. துரைசாமி அவர்களை இரண்டாண்டிற்கு முன் புரசைவாக்கத்தில் புற நானூற்று மாநாட்டில் கண்டேன்; பேச்சையும் கேட்டு மகிழ்ந்தேன். சிலப்பதிகார ஆராய்ச்சி, மணிமேகலை ஆராய்ச்சி போன்ற நல்ல காப்பிய ஆராய்ச்சி நூல்களை அவர் சற்று எளிய நடையில் எழுதுவார்களேயானல் சிறிது தமிழ்ப் படித்தவர்களும் படித்துப் பயன் பெற வாய்ப்பு உண்டாகும். அதோடு கருத்தின்றி ஏதேதோ வரையும் பல “மறுமலர்ச்சி எழுத்தாளர்” களின் கொட்டமும் குறையும்!

சிறிது கடினமாகத் தோன்றும் அவரது எழுத்து நடையைவிட பேச்சு நடையில் உயிர்ப்பு இருக்கிறது; வேகம் இருக்கிறது.

“பண்டைநாளைத் தமிழ் மக்களின் வாழ்க்கைப் பண்புகளை ஆராயலுற்ற அறிஞர் அனைவரும் புறப்பொருளை யுணர்த்தும் நூல்களைப் பொதுவாகவும், புற நானூற்றைச் சிறப்பாகவும் ஆராய்ந்திருக்கின்றனர். அவருள் பெரும்பாலோர் நிரம்பிய தமிழறிவில்லாமையாலும், பண்டைத் தமிழ் மக்களின் தொன்மை, அறிவு வன்மை, வாணிகத் துணிவு, அரசியல் நுட்பம் முதலியவற்றைக் கண்டதனல் எழுந்த அழுக்காற்ருலும் பிறவற்ருலும், சிலவற்றை விடுத்தும் சிலவற்றை மறைத்தும், சிலவற்றைத் திரித்தும் பிழைத்தும் தம் ஆராய்ச்சிகளை நடத்தினர்.

மெய்யைப் பொய் எத்துணையளவு மறைக்க முடியும்? மெய் தனது தூய ஒளியினை வெளிப்படுத்தி விட்டது! இந்நாளில் இம்மெய்யை யுணர்ந்து பிறர்க்கு எடுத்துரைத்துப் பொய்யைக் களைந்து போக்கும் புலவர் பலர் தோன்றிவிட்டனர்; பண்டைத் தமிழ் நன்மக்களின் மனத் திட்பம், வினைத்திட்பம், அரசியல் நுட்பம் என்றின்னோ ரன்ன நலங்களை எடுத்தோத முன் வந்து விட்டனர். நாடு நகரங்களிலெல்லாம் தமிழாராய்ச்சியின் நன்மணங் கமழ கின்றது; தமிழர் தமிழ நன்மக்களாகும் செயலில் தலைப் பட்டிருக்கின்றனர். தமிழியலும், தமிழிசையும் தமிழ் நாடகமும் தலை தூக்குகின்றன. அவை இடைக்காலத்திற் போலத் தலை மடங்குமாறு செய்யும் தீச்சுமைகளால் நெருக் குண்ணாது தூக்கிய தலை நிமிர்ந்து பீடு நடை கொண்டு பிறங்குமாறு செய்தல் தமிழ் மக்களின் உயிர்க்கடனாகும். அது குறித்து அவர்கள் செயற்பாலது யாது? அத்தமிழிய லும் தமிழிசையும் தமிழ் நாடகமும் தலை நிமிர்ந்து நிலவிய நாளில் தமிழ் நன்மக்கள் வாழ்ந்த வாழ்க்கை நெறியினை— அறச்செயல், பொருளீட்டல், புகழ் வேட்டல் முதலிய புறப் பொருள் துறைகளை—ஆராய்ந்தறிந்து செய்வன செய்தலே யாகும். அகப்பொருள் துறைகளை ஆராய்ந்து அறிந்த தன் பயனாய் அத்தகைய நெறியில் இந்நாளில் மணவினை நிகழ்த்தல் வேண்டுமென விழைபவர் தொகை பெருகுகிற தன்றோ? அவர்கட்கு இப்புறப்பொருள் ஆராய்ச்சி புறப் பொருள் துறையிற் சென்று சீர்பெறும் சீரிய நெறியினைப் பயப்பிக்கும் என்பதில் ஐயமில்லை. ஆகவே, இப்புறப்பொருள் ஆராய்ச்சி இந்நாளுக்கு ஏற்றதோர் ஆராய்ச்சி என்பதை நாம் இனிது தெரியவேண்டும்''

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பார் களே அதுமாதிரி மேற்குறித்த பேச்சு ஒன்றே அவரது பேச்சின் வன்மைக்கு எடுத்துக்காட்டாகும்.

மிகு சொல்லும் குறை சொல்லும் இல்லாமல் ஆங்கிலத்தில் Concise and precise என்பதற்கு ஏற்ப அவரது பேச்சு இருக்கிறது.

பண்டைப் புலவர்களைப் பற்றி மட்டும் ஆராய்வதோடு நில்லாது புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப்பற்றியும் அவர் ஆராய முற்பட்டிருப்பது காலத்தோடு இணைந்து செல்லும் நுண்ணறிவைக் காட்டுகின்றது. பண்டை இலக்கியங்களைப் பற்றி மட்டும் பேசுவதோடு அமையாமல், 'பிறர் சுரண்டலின்றி தமிழ்நாடு தனித்தியங்கவேண்டும்' என்ற தம் முற்போக்கு கருத்தை அஞ்சாமல் தமிழாசிரியர் மாநாட்டில் கூறியதும் வரவேற்கத் தக்கதொன்று.

ஔவை. சு. துரைசாமி அவர்கள் இனி புலவர் உலகோடு நில்லாமல் பாமர உலகிற்கும் ஏற்றாற்போல் பல்வேறு துறைகளில் பேச வேண்டுமென நான் ஆசைப்படுகிறேன். இவ்வாறு செய்தால் அவருக்கே அன்றி, தமிழ் நாட்டிற்கும் நன்மை ஏற்படும்.

6. கி. ஆ. பெ. விசுவநாதம்

"நடிப்பு" என்பது இங்குப் பேச்சே தவிர, நடித்துக் காட்டுவதல்ல. இடையில் அதுவும் வந்தாலும் வரக்கூடும்! ஆகவே இந்த நடிப்பை இருவகையிலும் தாங்கள் ஏற்றுக்கொள்வீர்களென்றே நம்புகின்றேன்.

நடிப்பு என்பதற்கு "மாற்றம்" என்பதே பொருளாகும். மாற்றுருக் கொள்ளுதல், மாற்றுடை அணிதல், மாறுபடமொழிதல், மாறுபட நடத்தல் இவையாவும் நடிப்பு என்பதன் பாற்படும். ஆனால், உண்மையான நடிப்பிற்கு இவை நான்கு மட்டும் போதாது. மாற்று மனமும் படைத்து நடிக்கும் நடிப்பே உண்மையான நடிப்பாகும். அதாவது, கூலி வேலை செய்பவன் அரசன் உருக்கொண்டு, அரசாங்க உடையுடுத்தி, அரசனைப்போலப் பேசி, அரச நடை நடப்பினும் அந்நடிப்பு அழகு தராது, அவன் தன்னை அரசனென்றே நினைத்துக்கொண்டானாயின், அந் நடிப்பில் புது அழகு தோன்றக் காணலாம். அதுபோன்றே சந்திரமதி வேடமணிந்த பெண், தன் மகன் பாம்பு கடித்து இறந்தான் என்றதைக் கேள்விப்பட்டதும், "அப்பா மகனே பாம்பு ....ஆவி துடிக்குதடா" என்று சொல்லி நடிப்பதும் நடிப்புத்தான். "ஆவி துடிக்கிறது" என்று சொல்லிக் காட்டுவது மட்டும் நடிப்பாகாது. பிதற்றிய சொற்களோடு விழிகளில் நீரைப்பெருக்கி வாடிய முகத்தினளாய் உடலைச் சிலிர்த்து ஆவியைத் துடித்துக் காட்டவேண்டும். இதுவே உண்மையான நடிப்பாகும். "இறந்தவன், தன் மகனே" என, வேடமணிந்த பெண் கருதினாலன்றி இத்தகைய சிறந்த நடிப்பை நடிக்க முடியாது......

"இக்காலத்திலும் சிறந்த நடிப்பு உண்டு. நடிப்பில் இருவகை உண்டு. வெளி நடிப்பு ஒருவகை; உள் நடிப்பு மற்றொரு வகை. உள் நடிப்பு இல்லாத நடிப்பு உயிர்

நடிப்பாகாது. உயிர் இல்லாத உடல் போன்று உயிர் இல்லாத நடிப்பும் வெறுக்கப்படும். உள்ளத்தில் தோன்றுகிற எண்ணங்களை உடம்பு காட்டும். அதிலும் தெளிவாக முகம் காட்டும். முகத்திலும் தெளிவாக கண்கள் காட்டும். கண்களிலும் கடைக்கண் தெளிவாகக் காட்டிவிடும். நடிப்பவர்கள் தாங்களே பாத்திரங்களாக மாறிக்கொண்டு, அவ்வெண்ணங்களைக் கண்களால் காட்டி நடிக்கவேண்டும்"

மேற்கண்ட பகுதியைப் படிக்கும்போது யாரோ ஒரு நடிகர் தனது நடிப்பின் பயிற்சியால் நடிப்பைப் பற்றி பேசியுள்ளார் என்றுதான் எண்ணத்தோன்றும். ஆனால் கூறப்பட்ட பகுதியை நடித்துப் பேசியவர் நடிப்பையே தொழிலாகக் கொண்டவரல்லர். பின் யார்?

எந்த ஆசிரியர்க்கும் இரண்டணா காசுகூட கொடுக்காமல் தாமே தமிழ் படித்து, முப்பது ஆண்டுகளாக தமிழ்ப் பேச்சை நடத்திவரும் இன்றைய "கூலவாணிக சாத்தனார்" திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் ஆவர்.

முதன் முதலாக அவர் தமது 22-ம் வயதில் (1921) காலஞ்சென்ற பெருங் கவிஞர். வெ. ப. சுப்பிரமணிய முதலியார் தலைமையில் "அன்பு", "மனதின் வலிமை" எனும் பொருள்பற்றி துணிவோடு பேசி, பேச்சரங்கம் ஏறினார். 'துணிவோடு' என்றதற்குக் காரணம் வீரத்தலைவர் வ. உ. சிதம்பரனாரும், கவிராஜ ஜெகவீர பாண்டியன் போன்ற பெரியோர்களும் அன்று உடன் பேசுபவர்களாக அமைந்திருந்து பேசியதால்தான்.

இலக்கியம், இசை, நாடகம், அரசியல், சமூகம், சீர்திருத்தம், சமயம், வாணிகம், தொழிலாளர், ஆராய்ச்சி

மேடை, வானொலி நிலையம் ஆகிய பன்னிரு துறைகளிலும் இதுவரை கி. ஆ. பெ. விசுவநாதம் பேசி வந்திருக்கிறார்.

எந்தப் பொருளைப்பற்றிப் பேசுவதற்கு முன்னும் விசுவநாதம் சிந்தித்துக் குறிப்பெடுத்துக் கொள்கிறார். முன்னே பேச வேண்டுவதை முன்னேயும் பின்னே மொழிய வேண்டியதைப் பின்னேயும் ஒழுங்காகப் பிரித்துக் கொண்டு கோர்வையாகப் பேசுகிறார்.

உண்மை-உழைப்பு-உணர்ச்சியோடு வரும் தென்றல் போன்ற குரலும், நன்றாகப் பேசவேண்டும் என்ற பொறுப்பும் அவரை ஒழுங்காகவும் அழகாகவும் பேசச்செய்து விடுகிறது.

தமிழும், தமிழரும், தமிழர் நாடும் முன்னேற வேண்டும் என்ற பெரு நோக்கோடு தொண்டு புரிந்து வருகிறவர் கி. ஆ. பெ. விசுவநாதம் என்பதை அறியாதவர் யார்?

தமிழ் மொழிக்குக் கெடுதலா? தமிழ் இசைக்கு எதிர்ப்பா? தமிழர்களின் நல உரிமைக்கு அழிவு வேலையா? — இவற்றை ஒழிக்கச் சிங்கம்போல் பகைவர் மீது பாய்ந்து, மடிதட்டி முன்வர விசுவநாதம் இதுவரை தயங்கினதுமில்லை; தயங்கப் போவதுமில்லை.

விசுவநாதத்தின் பேச்சில் செந்தமிழும், கருத்தாழமும், உணர்ச்சியும், தொடர்ச்சியும், உயர்ந்த நகைச் சுவையும் 'களி நடம்' புரிகின்றன. அவரது எடுப்பும் தொடுப்பும், முடிப்பும் தனி முறையானது. அவரது இலக்கியப் பேச்சுக்களில் அமைதி நிலவுவதைக் காணலாம்.

ஆராய்ச்சியுரைகளில் அறிவின் மேன்மையைப் பார்க்கலாம். எதிர்ப்பும் போராட்டப் பேச்சுக்களில் இயல்பான அமைதி இடம் விட்டு நகர்ந்து, கொதிப்புத் தலை தூக்கி நிற்கும். நாடகப் பேச்சில் நடிப்புத் தென்படும். உயர்ந்த நகைச் சுவையை அவரது புன்சிரிப்பிலும், ஏளனத்திலும் கண்டு கொள்ளலாம்.

இந்தி எதிர்ப்புக் காலத்தில் குட்டிக்கதை உதாரணங் களுக்கு அடடா! அவர் சொன்ன எதிர் குட்டிக்கதை களின் அழகுதான் எவ்வளவு! தமிழ் இசை எதிரிகளின் வாதங்களைக்கொண்டே பகைவர்களின் கொட்டத்தை அடக்கிவிடும் திறமைதான் என்னே!

கல்லூரிகளில் சேர தகுதியும் திறமையும் வேண்டும் என்று கூக்குரலிடும் இக்காலத்தில் அவரது அறிவுரைக் குச் செவி மடுப்போம்.

“திறமை என்பது எது? திறமையை அளக்கும் அளவு கோல் எது? யார் அளப்பது. எப்படி அளப்பது? முடிவு கூறுவது எவர்? கூறப்பட்ட முடிவுகளில் ஜாதிப் பற்று கலக்கவில்லை என்பதைக் கண்டு பிடிப்பது எப்படி? என்ற கேள்விகளெல்லாம் திறமை என்றதும் கிளம்புகின் றன. ‘அதிகமார்க்குகள்தான்’ திறமை என்பது என்றால், சலுகைக்காகவும், சிபார்சுக்காகவும், ஜாதிக்காகவும், பொரு ளுக்காகவும் ‘மார்க்’குகள் கொடுக்கும் வழக்கம் நம் நாட்டில் அடியோடு ஒழிந்த பிறகல்லவா மார்க்குகளைக் கொண்டு திறமையை அளக்க முடியும்? இப்போது அளப்பது எப் படி?

நேர்மையான ஆசிரியர்களிடம் படிப்புக்காக மார்க்குகள் வாங்கிய பையன்களைக்கூட திறமையுடைய

வர்கள் என என்றல் ஒப்பமுடியவில்லை. படிப்பிற்காக வாங்கிய மார்க்குகள் படிப்பிற்காகப் பயன்படலாம். அதை விட்டு தொழிலின் திறமைக்கு அந்த மார்க்குகள் எவ்வாறு பயன்படும்? படித்துப் பட்டம் பெற்ற டாக்டர்கள் சிலரை விட, பழக்கமுள்ள கம்பவுண்டர்களிற் சிலர் திறமை யுடை யவர்களா யிருப்பது ஏன்? படித்துப் பட்டம் பெற்ற 'இஞ் சினீயர்கள்' சிலரைவிட பழக்க முள்ள 'ஓவர்சியர்'களிற் சிலர் திறமையுடையவர்களாயிருப்பது எப்படி? இதிலிருந்து படிப்பின் திறமைக்கும், தொழிலின் திறமைக்கும் வேறு பாடுகள் இருக்கின்றன என்பது நன்கு விளங்கும். அவ் விதமிருக்க தொழிற்கல்வி கற்பிப்பதற்கு படிப்பின் மார்க்கு கள் முதல் தேவை என்பது எவ்வளவு பெரிய தவறு? அதை நம்மால் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? ....

என்னுடைய முடிவான கருத்து என்னவென்றல், திறமைமுதல் தேவையுமில்லை. இரண்டாம் தேவையுமில்லை. மூன்றும் தேவையுமில்லை! திறமை என்பதே அடியோடு தேவையில்லை என்பதுதான். திறமையுடையவர்களை எல் லாம் கொஞ்சம் காலத்திற்கு ஒதுக்கி வைத்துவிட்டு, திறமை யற்றவர்களை மட்டுமே கல்லூரிகளிற் சேர்த்துப் படிக்கும் படிச் செய்யவேண்டும். அப்போது தான் கையும் காலும் சூம்பிப்போய், வயிறு மட்டும் பெருத்து வலுக்குறைந்து வாடி யிருக்கும் தமிழ்நாடு வலுவடைய முடியும்.

திறமை யற்றவர்களைத் திறமையுடையவர்களாகச் செய் வது தான் கல்லூரிகளின் முதல் வேலையாக இருக்கவேண் டும். அதாவது செய்ய இப்போதுள்ள கல்லூரிகளுக்கு திறமை யில்லாவிடில் அக்கல்லூரிகளை இடித்துத் தூளாக்கி விட அரசாங்கம் உத்திரவு செய்யவேண்டும். அவ்வாறு செய்தால் கட்டிடங்களிலிருந்த நிலத்தில் கலக் கம்பாவது விளையும். உணவு நெருக்கடியான இக்காலத்தில் அது அதிக விளைவுக்கும் துணை செய்வதாகவுமிருக்கும்! ......

"திறமை" யின் சூதை நன்கு விளக்கி, அசைக்க முடியாத காரணங் காட்டி விளக்கும் கி. ஆ. பெ. வி. யின் பண்பை மேலே கண்டோம்.

இனி முப்பதாண்டுகளுக்கு மேல் பேச்சுத்துறையில் பழக்கமுள்ள அன்பர். கி. ஆ. பெ. விசுவநாதத்தினிட மிருந்து பேசுவது எப்படி என்பதைக் கேட்டுப் பயன் அடைவோம்.

"உணர்ச்சி, உள்ளத்துடிப்பு-இவற்றைஅடிப்படை யாகக்கொண்டு எழும் பேச்சு சரசரவென்று ஓடிவரும். கூவிப் பேசவேண்டாம். உணர்ச்சிதான் பேச்சு. உணர்ச்சி யுள்ள இடத்தில் பேச்சு உண்டு. நம் நாட்டில் இரண்டு கச்சேரிகள் நடைபெறுகின்றன, ஒன்று இசைக் கச்சேரி; மற்றொன்று பேச்சுக் கச்சேரி......

சொல்வலிமையே சொற்பொழிவு. நமக்குத் தமிழ் வன்மை வேண்டும். அவ்வன்மைதான் சக்தி. பேச விரும் பினால் இரத்தத் துடிப்பு வேண்டும். படபடப்பு ஓர் அள வோடு இருக்கட்டும். உயிர்களும் மக்களும் சார்ந்ததன் வண்ண மாவர். பேசுவோர் கொட்டாவி விட்டுக்கொண்டே பேசினால் கேட்போரும் கொட்டாவி விடுவர். மற்றும், எதிரிலிருப்போர் சோம்பிக் கொட்டாவி விடும்படியும் பேசப் பழகுதலாகாது.

நாடகத்தை எடுத்துக்கொள்வோம். அது கதா சிரியனை (கலைஞன்)ப் பொறுத்தது. அவன் நம்மை நாடகத் துள் அப்படியே இழுத்துக்கொள்வதைப் பார்க்கிறோம். அவ னைப் போன்றவனே சொற்பொழிவாளன். கேட்போர்க்கும் இலக்கண முண்டு. அவர் மனம் எண்ணெய்த்தாள் (oil paper) ஆகக்கூடாது. அது ஈரத்தை இழுக்காது. நீர்த்துளி களை நழுவவிட்டு விடும். ஆனால் ஒற்றுத் (Blotting) தாளாக வேண்டும், பேசுவோர் கூறியதை விடாமல் பற்றிக்

கொள்ளவேண்டும். அவர்கள் விழிப்புடன் பற்றும்படிப் பேசுவதும் சொற்பொழிவாளர் கடமை என்பதை மறத்தலாகாது.

அறிவு வேறு கல்விவேறுதான். கற்றவர்கள் படித்தவர்கள்; ஆனல் அறிந்தவராகார். கற்றதை வாழ்வில் காண்பவரே அறிந்தவர். ஆனல் கல்வி அறிவை வளர்க்கும் என்பதில் ஐயமில்லை. சொற்பொழிவாளர்க்கு இவ்விரண்டும் வேண்டும். இவற்றுடன் நல்லறிஞரிடம் நேரே அறிவுரைகளைக் கேட்கவேண்டும்; அவர் சொற்பொழிவைக் கேட்க வேண்டும். அப்போதே தான் பேசும் பொருளில் தெளிவும் நெறியும்நிகழும். இசைவாணர்க்கு மட்டுமல்ல, பேசுவோர்க்கும் குரல் வேண்டும்; தெளிந்தகுரல் வேண்டும். கிழவர்களின் நடுங்கும் சொற்களும். குழந்தைகளின் குளறும் சொற்களும் பலரிடம் உண்டு; அவற்றைக் கேட்போர் வெறுப்பர். ஆகவே சொற்கள் தெளிவாய் வெண்கல ஒலியில் வெளிப்பட்டால்தான் காதுகளைக் கவரும்.

பேச்சில் உணர்ச்சி மட்டுமல்ல துணிச்சலும் வேண்டும். உணர்ச்சி துணிச்சலைக் கொண்டுவரும். சமூகத்தின் தாழ்வைக் கண்டெழும் ஆத்திர உணர்ச்சி, அதை எதிர்த்து வருவோர் அறிஞர், செல்வர், அரசர் யாரேனும் அஞ்சாது இடித்துரைக்கும் துணிச்சலை உண்டாக்கிவிடும். ஆனல் பேச்சு கூலிக்காக நிகழ்தலாகாது. வியாபாரியிடம் உண்மைப் பேச்சுண்டு; திறமையுண்டு. வியாபாரிகளில் பேசாதவரே இல்லை: கொஞ்சம் அவர்களைச் சுண்டிப் பாருங்கள், தெரியும்!

பேச்சு கொட்டுதலாகாது. திறன் வேண்டும். அப்போது சில சொற்களே சாலும்.........

அவையடக்கம் வேண்டாம் என்பது என்கட்சி. அது தொடங்கினல் அளவில்லாமல் போகிறது; மணிக்

கணக்கில் போகிறது. அதை முடித்துப் பேச்சுத் தொடங் கும்போது கேட்போர் விருப்பம் முடிந்து விடுகிறது; சோம்ப லும் தூக்கமும் வந்துவிடுகிறது.........

எடுத்த பொருளைக் குறித்த காலத்தில் முடித்து விடப் பழகவேண்டும். பேசத்தொடங்கிய ஓரிரு நிமிடங் களிலேயே பொருளில் சென்றுவிட வேண்டும். பீடிகையை வளர்த்தக்கூடாது. தன்னை உயர்த்திப் பெருமை படுத்திக் கொள்வது எவ்வளவு இழிவோ அவ்வளவு தன்னைத்தாழ்த் திக் கொள்வதும். எளியேன்; அறியேன்; சிறியேன்; நாயேன்; என்றுஅளவெல்லாம் இழிவாகச் சொல்லிக் கொண்டு, பலர், மனிதற்குள் தன்னைவிட அறிவாளியாரு மில்லை எனச் செருக்கித் திரிகின்றனர். இம்முறை ஒழிய வேண்டும். கேட்போர் ஏதோ தம்மைப்போல், தம்மைவிட அறிந்தவர் என்றே நம்மைப் பேசச் செய்கிறார்கள். அதை விட்டு யான் அறியாதவன், பொறுத்துக் கொள்ளவேண்டும் எனவெல்லாம் பிதற்றக்கூடாது. எதிரிலிருப் போரை அறியா தவர்களாகக் கருதிக்கொண்டு பேசினால் அது பேச்சுத்திறனுக் கும் நெஞ்சில் துணிவிற்கும் வழிகளாம்; பேச்சு குழறலோ கைகால் நடுக்கமோ ஏற்படா.

அவையின் குறிப்பை அறிந்துபேச வேண்டும். குறிப்பறிதல் சிறந்த மனிதப் பண்பு. அஃதின்றி பேச்சில் வெற்றி கிட்டாது. அவையினர் கருத்து முழுதும் நம்மிடம் உள்ளதா, நாம் பேசுவது அவர்க்குப் புரிகிறதா, பிடிக்கிறதா என்பதனை அவர்களைப்பார்த்து அறிந்து பேசவேண்டும்...... தன் உணர்ச்சியும், உள்ளமும் கேட்போரதாகச் செய்து அவர்களைத் தன்னுடன் அழைத்துச் செல்லவேண்டும். தான் முடிக்கும்போதே அவர்கள் அப்பால் பார்க்கவேண் டும், அப்படிப் பேசுவது பேச்சு.

கூட்டத்தில் பிறரைத் திட்டுவதும், வேறொன்று பேசுவதும், இல்லாததைப் பேசுவதும் பயனில்லாதன...

உண்மையை ஆழும்படிப் பதிப்பிக்க வேண்டும். அகல உழ வதினும் ஆழ உழவேண்டும்... விட்டு விட்டு, நினைத்து நினைத்துப் பேசுவதும், மறந்தவிடத்தே அளப்பதும் பின்னர் தொடர்வதும் ஆகாது. மறந்ததும் நிறுத்திவிட வேண்டும். பொருளுக்கு ஏற்பப் பேச வேண்டும்.

பொருளைப் பல பகுதிகளாகப் பிரித்துப் பேசுதல் நலம். எந்தப் பொருளையும் அதன் பண்டைய, இன்றைய வருங்கால நிலைகளாய்ப் பிரித்துப் பேசலாம். பல கருத்துக்களையும் தொடுத்துப் பின்வரிசைப் படுத்திப் பேசவேண்டும். முன் பின்னாக முரண்படக் குழப்பக்கூடாது. பல தொடர்ந்த கருத்துக்களைச் சேகரித்துச் சொல்லவேண்டும். எழுதிப் படிப்பது என்றும் கேடுதரும். அது வேண்டாம். குறிப்புவைத்து அதை நினைவூட்டிக்கொண்டு வேண்டியதைப் பேசுங்கள். கிடைத்த நேரத்தில் நினைத்ததையெல்லாம் பேச முயற்சிக்கக்கூடாது. காலத்தில் தெளிவாக்க முடிந்த அளவில் நிறுத்திக்கொள்வதே நாகரிகம்; முறை.

நகைச்சுவை அளவாக இருக்கவேண்டும். அளவு மீறினால் நையாண்டியாய் விடும். பேரறிஞரே நகைச்சுவையைக் கையாள முடியும். நகைச்சுவை அறிஞர்க்கு நகைப் புண்டாக்கும். நையாண்டி கசடர்க்கு நகைப்புண்டாக்கும். குழம்பில் உப்பு சிறிது மிகுந்தாலும் எல்லாம் கெடுவதுபோல் நகைச்சுவை ஒரு அணு மீறினாலும் பேச்சின் மூச்சுப் போய் விடும். நகைச்சுவை உண்டாக்க நல்ல முறை ஒன்றுண்டு. ஒரு கருத்தில் உயர்நிலையையும் இழி நிலையையும் ஒப்பிட்டுக் கூறவேண்டும். உயர்வை அடுக்கிக்கொண்டே சென்று, முடிவில் இழிவொன்றைக் கூறினால் நகைப்புப் பொங்கும். சான்றாக 'பெண்கள் மேனாட்டில் உரிமையுடன் கார் ஓட்டி, விமானம் ஊர்ந்து, உலகஞ் சுற்றுகின்றனர்' என அடுக்கி விட்டு 'நமது பெண்களும் சுற்றுகின்றனர்' தவறாமல் சுற்றி வருகின்றனர் 'அரச மரத்தை, வேப்ப மரத்தை' என்றால்– அங்குச் சுவையுண்டு. பிறர் பேசுவதைக் கண்டு நாமும்

நகைச்சுவைபடப் பேசலாம் என முயற்சிக்கக் கூடாது. உண்மைச் சூரியன் பார்க்கத்தான் உதவும். போலிகள் அவ்வளவும் காலத்தில் பெருமை குன்றியே போகும்"

சென்னை பட்டிமன்றத்தில் கி. ஆ. பெ. விசுவநாதம் "சொற்பொழிவின் சொற்பொழிவு" என்ற தலைப்பில் பேசிய பேச்சின் சுருக்கத்தை இதுவரை கேட்டோம். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையையும், அஞ்சாமல் ஆணித்தரமாகச் செப்பும் வண்மையையும் அதில் பொதிந்துள்ளதை நாம் கண்டு களிக்கவேண்டும். தமிழ்ப் பேச்சாளர்களில் காலங் தவறாமலும், பேசும் பொருள்பற்றி முதலில் சிந்தித்தும் பேசுகின்ற சிலரில் கி. ஆ. பெ. வி. நல்ல மதிப்பு பெற்றவராவர். சங்ககாலப்புலவர் முதல் பாரதி தாசன் ஈறாக எந்தத் துறையைப்பற்றிப் பேசக் கூப்பிட்டாலும் வேலையில்லாதிருந்தால் (வணிகராய் இருப்பதால்) ஒத்துக்கொள்வார். வாக்குக் கொடுத்துள்ளபடி தவறாது வருவார். வருகிறேன் என்று சொல்லிவிட்டு திரண்டு வந்திருக்கும் பொதுமக்களை ஏமாறச் செய்யவேமாட்டார்.

இதுவரை தமிழகத்தில் பலர் மிகுந்த பாடுபட்டு எழுப்பியுள்ள நல்ல சூழ்நிலையைக் 'கண்டும் காணாதவர்களாக இருந்து' பாடுபடாத சிலர் தட்டிப் பறித்துக் கொண்டு போகும் 'கண்ணன் விளையாட்டை'த் தடுத்து, உழைப்புக்கேற்ற ஊதியங் கொள்ளவேண்டுமென்ற உரிமையுணர்ச்சியோடு, தமிழர் கழகத்தை அவர் மீண்டும் புதுப்பித்து, 'தமிழர் நாட்'டைத் தொடங்கி யுள்ளார். தக்கசமயத்தில் பக்கபலமாக வந்திருக்கும் அன்பர் விசுவநாதத்தை, உண்மையை யறிந்து கொண்டுள்ள யாவரும் பாராட்டுவர் என்பது என்னவோ நூற்றுக்கு நூறு 'மெய்குறி' யாகும்.

மேலும் மேலும் மக்களின் அறிவுக்கண்ணைத் திறந்து விடக்கூடிய புதிய சொற்பொழிவுகளை இனிச் செய்வார் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு; எதையும் செவ்வையாகச் செய்யும் கி. ஆ. பெ. விசுவநாதத்திடம் நாம் கொண்டுள்ள நம்பிக்கை வீண்போகுமா என்ன!

6. சி. என். அண்ணாத்துரை

மேதைகளின் அறிவையும், ஆற்றலையும் உலகம் என்றும் எளிதில் ஏற்றுக்கொள்வதே இல்லை. அவர்களை அது மேலுக்கு வராமல் தாழ்த்துவதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருக்கிறது. அவ்வாறு தாழ்த்தத் தாழ்த்த மேதையின் மேன்மை சுடர் விட்டு ஒளிர்கிறது. "மண்ணாங்கட்டி" யாகக் கருதப்பட்ட மேதை, புடம் போடப்பட்ட பின்னர் மாசுமறுவற்ற தங்கக் கட்டியாக மாறுகிறான்.

உண்மையில் திரு. அண்ணாத்துரை இன்று இந்நிலையில் தான் உள்ளார். அவரது அறிவையும் ஆற்றலையும் அறிந்தவர்கள் கூட அறியாதவர்கள் போல் பாவனை செய்கின்றனர். பொருளற்ற கட்சிக்கண்ணாடி கொண்டு, பலர் அண்ணாத்துரையைப் பார்க்கின்றனர். இதனால் தான் உண்மைக்கு இடமில்லாமல் போய்விடுகிறது!

தமிழ் மக்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட நாவன்மை படைத்தவர்களில், மிகுந்த செல்வாக்குள்ள ஒருவர் "அண்ணா". தமிழ்ப்பேச்சு முறையில் அண்ணா, உண்மை மறுமலர்ச்சியைக் கையாள்பவர். பழைமை முறையில், கூட்டத் தலைவரையும் பொதுமக்களையும் போற்றிப் போற்றி முன்னுரையை நீட்டிப் பேசும் வழக்கம் அவருக்கு இல்லை.

பரந்த நெற்றி; குள்ளமான உருவம்; நீண்ட சட்டை அணிந்த உடம்பு; வெற்றிலைப்பாக்கை குதப்பிக்கொண்டிருக்கும் வாய்; கேட்கக் கேட்கத் தெவிட்டாத மிக இனிய குரல்; மேதைக்குரிய காட்சிக்கு எளிமை; ஆழ்ந்த கருத்தையும் அழகுபட எடுத்துரைக்கும் திறமை—இவற்றை எல்லாம் உருக்கி வார்க்கப்பட்ட பண்பு படைத்தவர் அண்ணா. "தோழர்களே!" என்ற எளிய முறையில் தொடக்கத்தில் அழைப்பதோடு பெரும்பாலும் அவருடைய முன்னுரை முடிந்து விடும்.

பிறகு, தென்றல் போன்று இனிமையான சொற்கோப்பினால், கேட்பவர்கள் மனதில், 'தான் சொல்வது நியாயமானதுதான்' என்ற முடிவுக்கு விரைவில் வரக்கூடிய சொல்லோவியங்களைச் சுருள் சுருளாக விடாது எழுப்பிக் கொண்டே இருப்பார். கேட்பவர் அலுப்புத் தட்டாது, அவர் சொல்லும் முறையை, எண்ணத்தை, கையாளும் சொற்களைக் கவனத்துடன் எந்நேரம் வேண்டுமானாலும் கேட்டுக்கொண்டே இருக்கலாம் என்ற முடிவோடு அமைதியாக அமர்ந்திருப்பார்கள். இவை வெறும் அளப்பல்ல; முழுவதும் உண்மை.

எந்தப் பொருளைப்பற்றிப் பேசினாலும், அப்பொருளுக்கு ஏற்ப நகைச்சுவை ததும்ப விளக்கி, அவற்றோடு தம் உள்ளத்தில் தோய்ந்துள்ள கருத்துக்களைக் கலந்து பேசுவது அவரது இயல்பு.

இடத்திற்குத் தகுந்தவாறும், நிலைமைக்கு ஏற்றவாறும், அதே சமயத்தில் தமது நியாயமான கொள்கையை நாகரிக முறையில் பேசும் தகுதி அண்ணாவிடத்தில் கொள்ளை கொள்ளையாக இருக்கிறது! இந்த இடத்தில், அண்ணா சிறந்த பேச்சாளர் மட்டுமல்ல; எழுத்தாளர்: சிறு கதை நாடக ஆசிரியர் என்று கூறுவது நல்லது என்று நினைக்கிறேன். உரையாடலிலும் (Debate) அவர் சிறந்தவர். திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, ச. சோமசுந்தர பாரதியார் ஆகியோருடன் அவர் உரையாடிய உரையாடல் தமிழர் எல்லோராலும் போற்றிப் புகழ வேண்டிய தொன்று.

பிரஞ்சுப்புரட்சி, ரோமர்களின் அழிவுக்குக் காரணம்; முதலாளி தொழிலாளி தகராறு; அரசியல் தகிடுதத்தங்கள், விதவையின் கண்ணீர், மதத் தலைவர்களின் அட்டூழியங்கள்—ஆகிய அனைத்தையும் கவர்ச்சியுடன் நகைச்சுவை மிளிர-அழகுபட-கேட்க கேட்கத் தெவிட்டாத விதத்தில் சொற்பொழிவு ஆற்றுவதில் கைவந்த கலைஞர் அண்ணாத்துரை.

தம் கட்சிக்கூட்டத்திலே (திராவிடர் கட்சி) பேசும் போது கூட, வாத முறைப்படி அலசி அலசிப் பேசும் அவரது திறனை அறிய பிற கட்சித் தோழர்களும் கடைசிவரையில் இருந்து கேட்டு, "அடடா! எவ்வளவு அழகாக மணிக்கணக்காக பேசுகிறார். இவர் ஒருவரே போதும் இவர்

கட்சிக்கு" என்று வியந்து பாராட்டிப் பேசுவரென்றால் வேறு என்ன சொல்லவேண்டும், சொல்லமுடியும், அவரது ஈர்க்கும் குணத்தைப்பற்றி! தம் கட்சியில் பேசும்போதும், பொது வான கூட்டத்தில் உரையாற்றும் போதும் அவரது 'நா' என்றும் நிலைத்திருக்கக்கூடிய மணிக்கருத்துக்களை-வாக்கியங் களை-உதிர்ப்பதை என் காதால் பலதடவை கேட்டிருக் கிறேன்.

நீண்ட மூன்னுரையை இத்துடன் சுருக்கிக்கொண்டு இனி அவரையே பேசச் செய்வேன்.

அண்ணா பேசுகிறார்!

"இலட்சியங்களைச் சடுதியில் அடைவதென்பது எந்த இயக்கத்திலும் சுலபமான காரியமல்ல, அதிலும் நமது இயக்க இலட்சியங்களோவெனில், பல ஆண்டுகள் போர் புரியினும், மேலும் மேலும் போர்க்களமே நமது கண்முன் தெரியும்படியான நிலைமையைத் தரவல்லது. தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்பு ஆரம்பித்து வெற்றியோ, தோல் வியோ அடைந்து, வெற்றி கண்டால் ஆனந்தத் தாண்டவ மாடுவதும், தோல்வி நேரிடின் கொட்டாவி விட்டு தூங்கப் போவதும், அரசியல் கட்சிகளின் இலட்சணமாக இருக் கிறது.........

நாம், மனித சமுதாயத்திலே, சமத்வம், சகோதரத் வம், விடுதலை—நிலவ வேண்டுமென ஆசைப்படுகிறோம். பல நூற்றாண்டுகளாக நம் நாட்டிலே இந்நிலை இல்லை என் பதைச் சரித்திரம் கூறுகிறது. மக்கள் சமத்வம் சகோதரத் வம் விடுதலை பெறுவதென்பது சுலபத்திலே தீர்ந்துவிடக் கூடியதன்று. இந்த இலட்சியங்களின் சாயல்களைப் பெறு வதற்கு ஐரோப்பிய நாடுகளில் புரட்சிகள் நடந்து இரத்த ஆறுகள் ஓடி இருக்கின்றன. மக்களிடையே சமத்வம்

நிலவுவதென்ருல், அதைத் தடைபடுத்தும் கொள்கைகள் அழிக்கப்படவேண்டும். அந்தக் கொள்கைகளைக் கொண்ட இயக்கங்களுடன் போரிடத்தான் வேண்டும். அந்தப்போரின் அவசியத்தை மக்களிடை எடுத்துக்கூறி அதில் ஈடுபடக் கூடிய அளவு பக்குவம், பலம்—இவைகளைப் பெறும்படியாக, மக்கள் தயார் செய்யப்படவேண்டும். சுருங்கக்கூறின், அறிவுப்படை அணிவகுப்பு நமது முதற்பணி. அதில் நாம் ஓரளவிற்கு வெற்றி பெற்று விட்டோம். நாம் கண்ட வெற்றிக்குப் பிறகு, அது நமக்குச் சர்வ சாதாரணமாகத் தோற்றக்கூடும்; அலட்சியமாகவும் அதை நோக்கக்கூடும். ஆனல் புராதனத்தையே புனிதமெனக் கருதும் இந்நாட்டிலே புதிய அறிவுப்படை திரட்டப்படுவதென்ருல் அது ஓர் ஒப்பற்ற வெற்றி என்பதை யார் மறுக்க முடியும்?......

சமுதாய சீர்திருத்தங்களுக்கெனத் தோன்றிய சமாஜங்கள், கூடங்கள் யாவும் பெரிதும் மதப்பற்றையே தலையாகக் கொண்டிருந்தன. மதப் போர்வை இருந்ததால் மக்கள் தாராளமாகத் தங்கு தடையின்றி அவ்வியக்கங்களில் சேரவும், அவைகளிலே மட்டமற்ற நம்பிக்கை வைக்கவும் ஏதுவாயிற்று. ஆனல் பரந்து விளங்கிய அவ்வியக்கங்கள், சமுதாயத்திலே பிரமாதமான மாறுதலைச் செய்து காட்டவில்லை. ஏனெனில், பெரிய மாறுதல்களிலே மக்களுக்கு ஆர்வம் எழும் வகையிலே, அறிவுச்சுடர் புகவில்லை. மதத்திலே இலயித்துள்ள எந்த இயக்கத்தாலும், மனமாற்றத்தை, மனப்புரட்சியை உண்டாக்கமுடியாது. புதிய தத்துவார்த்தங்கள், புதிய குருக்கள், விருத்தியுரைகள் ஏற்படலாம், ஏதாவதொரு மதத்திற்குச் சற்றே முரணை திட்டம் ஏற்படினும், அதற்காக ஏதேனும் ஒரு பழம் ஏட்டை எடுத்து, புதிய அர்த்தம் சொல்ல வேண்டி வந்ததே தவிர, சமூகக்கோளாறுகளை ஒழிக்க, முதலில் கோளாறுகளின் காரணங்களை, பட்ட வர்த்தனமாக எடுத்துக்கூறும் விதத்திலே அந்த இயக்கங்கள் வரவில்லை. ......அடிமைத்தனத்திலுள்ளவர் தொகையே இங்கு அதிகம். ஆகவே இத்தகையோர் அன்னி

யரை விரட்ட விடுதலைப் போர் தொடுத்துப் பயனில்லை என்பதை, தோழர் ஈ. வெ. ரா. எடுத்துக்காட்டினார். 'வெளி நாட்டு விரோதியை விரட்டியடிக்கும் சக்தி நமக்கு வேண்டு மானால், இங்கு அடிமைப்படுத்துவோர் இருக்கலாகாது' என்றார். 'வெள்ளையனை ஓட்டி, சுய ஆட்சி பெறவேண்டு மென்ற ஆவலில் அதிக மக்கள் பங்கு எடுத்துக்கொள்ள வேண்டுமானால் அதே விடுதலை யார்வம் இங்கு முதலில் எழவேண்டும்' என்றார். இங்கு அக்கிரகாரத்தையும் சேரி யையும் உள்ளடக்கிய ஊர்களிலே வசித்துக்கொண்டு, இங்கு வெளியே செல்ல வேண்டுமானால் பூனைக்கும் பல்லிக்கும் பயந்து வாழும் நிலையில் இருந்துகொண்டு, இங்கு விதவையை மணந்து கொண்டால் ஆண்டவன் ஆணையை மீறியதாகும் என்ற மனோபாவத்தை வைத்துக்கொண்டு, "எங்கள் ஊரை ஆட்டி வைக்கும் நீங்கள் யார், போங்கள் இந்த நாட்டைவிட்டு" என்று நாம் எங்ஙனம் சொல்லமுடி யும்? சொன்னாலும் அவன் எங்ஙனம் போவான்?......... பழைய ஏடுகளுக்கே, பல நூற்றாண்டுகளாக அடிமைப் படுத்தப்பட்ட நம்மை, சமூகத்தில் சிறுபான்மையினர், ஆயுத பலமின்றி 'ஆத்ம பலத்தாலேயே' ஆயிரக்கணக் கான வருஷங்களாக அடிமைப் படுத்திய நம்மை, பிறப்பினா லேயே ஒருவன் நமக்கு மேலானவன்—பூசுரன்—என்ற மனோ பாவத்தை வளர்த்துக்கொண்டே நம்மை, வெள்ளைக்காரரின் பீரங்கிப்படை அடிமைப் படுத்தியதிலே ஆச்சரியமொன்று மில்லை! ஆகவே அடிமை மனப்பான்மையை வளர்க்கும் எதுவாயினும் அதை எதிர்த்துப் போரிட வேண்டிய அவசியம் நமக்கு எற்படுகிறது."

அவரது லட்சியத்தையும் அதற்கு எதிரிடையான பிற்போக்கு சக்திகளையும், அதற்குரிய மாற்றையும் பார்த் தோம்.

இனி 'நாடும் ஏடும்' எப்படி இருக்கவேண்டும் என்பதைப் பற்றி அவரது கருத்தை அறிவோம்:

"நாடு மக்களால் நிறையப்பட்டிருக்கும் ஒன்று. ஏடு நாட்டு மக்களால் கற்கப்படுவது; கையாளப்படுவது; செய்யப்படுவது; போற்றப்படுவது. அந்தந்த நாட்டிலுள்ள ஏடுகளைப் பார்த்தால் அந்தந்த நாட்டு மக்களைப்பற்றி, நாகரிகத்தைப்பற்றி, வாழ்க்கை வளங்களைப்பற்றிப் பாங்குற, எளிதாக, ஏமாற மார்க்கமின்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். ஆம்! நாட்டிலுள்ள ஏடுகள், நாட்டில் உள்ளதை, நடப்பதை, மக்கள் மன வாழ்க்கை முறைகளை வகுத்துக் காட்டும் கண்ணாடியாகக் காட்சியளிக்க வேண்டும்; நாட்டிற்கும் ஏட்டிற்கும் தொடர்பிருக்கவேண்டும்; நாட்டோரை நடுநிலை பிறழா நல்ல நீதிபதிகளாக்க உறுதுணை செய்யும் ஊன்றுகோலாக உதவ வேண்டும்.

இலக்கியங்களில் சிறந்தவற்றை, நாட்டுக்கு நலம் பயக்கும் ஏடுகளை, மனிதனை மனிதத் தன்மையுள்ளவனாக விளங்கத் தூண்டும் இலக்கியங்களை; அறிவை அகலப் பரப்பும் அந்தாதிகளை அனைவருக்கும் பயன்படக்கூடிய நிலையில் வெளிப்படுத்த வேண்டும். இப்பேருழைப்பை மேற்கொள்கையில் பெரிதும் சிறிதுமான பற்பல இடுக்கண்களோடு இடரி மோத நேரிடும்; பலரின் பரிதாபத்திற்கும் கேலிக்கும் கண்டனத்திற்கும் உள்ளாக நேரிடும். அவற்றை அறிவாளர் அறமென மதியார்; எடுத்த காரியத்தை எதிர்ப்புக்கும் ஏளனத்திற்கும் அஞ்சாமல், புகழ்ச்சிக்கும் பூசலுக்கும் மண்டியிடாமல் தொகுத்து முடிப்பர். அது மனிதர் மனிதருக்கு மனிதத்தன்மையோடு செய்யும் நேரிய செயல்; அது தான் முறை."

"இலக்கிய ஏடுகள் மக்களின் 'மார்க்கட்'டிலே மலிந்து நடமாட வேண்டுமானால், இலக்கியம் கோபுர உச்சியிலிருந்து குப்பை மேட்டுக்கு வரத்தயாராக இருக்கவேண்டும்.

கற்றோரும் மற்றோரும், பண்டிதரும் பாமரரும், பணக்காரனும் ஏழையும் படித்துணரும் பாங்கிலே, எளிய நடையிலே இயற்கைக் கருத்தைக் கவின்பெற எடுத்துரைக்கும் ஏடுகள் எழுதப்படவேண்டும்.........

நாட்டின் நிலை நவிலா ஏடு மாளட்டும்; இலக்கியம் இறக்கட்டும்; கலை கலையட்டும். நமக்கு வேண்டுவது ஏட்டைப் புரட்டினால் நாடு, நாட்டின் மக்கள், மக்கள் வாழ்க்கை, அவர்தம் வாழ்க்கை வளன், நாகரிகம் இன்ன பிறயாவும் தெள்ளிதில் விளங்குதல் வேண்டும்; அது ஏட்டோடு நிற்றல் சாலாது,- நடைமுறையில் நடப்பதையே நவிலும் நூலாதல் வேண்டும்."

"ஒரு காலத்திய ஏடுகள் பிறிதொரு காலத்தின் நிலைக்கும், கருத்திற்கும் பொருந்தாவெனின் அவை மாற்றப் படவேண்டும். அந்தந்தக் காலத்திற்கும் கருத்திற்கும் ஒத்த ஏடுகள் உண்டாக்கப்பட வேண்டும்......பண்டை இலக்கியங்களில்லாமல் எந்த நாடும் முன்னேறவில்லையா? உலகத்தாரால் 'உயர்ந்த நாடு' என்று உரைக்கப்படவில்லையா? இலக்கியத்தால்தான் நாடு முன்னேற முடியுமா? சான்றாக, துருக்கியும் ஆஸ்திரேலியாவும் பண்டைய இலக்கியப் பெருமை வாய்ந்த நாடுகள் அல்லவே! மக்கள் அங்கு மாக்களாகி விட்டனரா, இலக்கியமில்லாத காரணத்தால்? கருத்துக் கினிப்பூட்டும் காவியங்களோடு காலத்துக்கேற்ற கதைகளும் நாளடைவில் தோன்றத்தான் செய்யும். நாட்டிற்கும் ஏட்டிற்கும் தொடர்புள்ள நாடுகள் என்றும் நலியா. நாட்டிலே சிறந்த ஏடுகள் எல்லையற்றவை யிருப்பினும் அந்நாட்டிற்கும் அவ்வேடுகட்கும் சிறிதும் சம்பந்தமின்றிச் சதுர் ஆடிக் கொண்டிருந்தால் அந்நாடு நாளடைவில் நசித்துப் போகும்; கலை நாகரிகம் யாவும் மறைந்தொழியும்......"

"இலக்கியமின்றி நிலைத்திராத மதம் மதமல்ல. அது வெறும் (திமிர்) மதந்தான். இலக்கியமின்றி இலங்க முடி

யாத மதம் வேண்டாம் நமக்கு. மதமின்றித் திசைவோண்ணுத இலக்கியமும் வேண்டாம் நமக்கு. இந்த மதப்போர்வையைப் போர்த்துப் போர்த்து மக்களை மடையர்களாக்கி விடுகின்றன இந்நாட்டு ஏடுகள்.''

"நாடும் ஏடும்'' பார்த்தோம். நல்ல தீர்ப்பை கவனிக்க வேண்டாமா?......கவனிக்க வேண்டுமா? இதோ நல்ல தீர்ப்பு!

"தீர்ப்பு என்றால் பலவிதம் உண்டு. ஆண்டவன் அடியார்க்கு அளிக்கும் தீர்ப்பு ஒருவிதம்; அரசன் குடிகட்கு அளிக்கும் தீர்ப்பு மற்றொரு விதம்; சட்டசபைத் தீர்ப்பு ஒரு தன்மையது; வல்லோர் எளியோருக்கும், முதலாளிகள் தொழிலாளிகளுக்கும் அளிக்கும் தீர்ப்பு பிறிதொரு தன்மையது. இவையாவும் நல்ல தீர்ப்பு என்றே அவரவர் நவிலுவர். ஆனால் தீர்ப்பு, காலத்திற்குத் தக்கவாறும், நிலைமைக்குத் தக்கவாறும், கருத்துக்குத் தக்கவாறும் மாறும்; மாறித்தான் தீரும்; மாறித்தான் தீரவேண்டும். ஒரு காலத்திலே 'நல்ல தீர்ப்பு' அல்ல என்று எள்ளி நகையாடப் படும்......''

"சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் தீர்ப்பு எதுவானாலும் அதுதான் நல்ல தீர்ப்பு; நல்ல தீர்ப்பு நல்லவர்கள் செய்யும் தீர்ப்பாக என்றும் இராது. ஏனெனில், நல்லவர்கள் தீர்ப்பு என்றும் இரக்கமுடையதாகவே இருக்கும்...

"மக்கள் மாறுதலை எதிர்த்து வாழமுடியாது. ஒன்று மாறுதலோடு ஒன்றி வாழமுடியும்; இன்றேல் மாறுதலோடு மோதி மடியமுடியும்.''

நாம் நல்ல தீர்ப்பைக் கேட்கச் சென்றோம். ஆனால் அண்ணா, நம்மையே நல்ல தீர்ப்புக் கூறும்படிச் செய்து விட்டார். 'நாடும் ஏடும்', 'நல்ல தீர்ப்பு'ம் கேட்ட பிறகு

மறுமலர்ச்சி சிறிது வேண்டுமே! ஆராஅமா இருந்து "மறு மலர்ச்சியை"ப் பெறுவோம்.

"செடியிலே மலர் கூத்தாடுகிறது. மணம் வீசுகிறது, மறுநாள் வாடுகிறது, உதிர்கிறது. பிறகு வேறொரு மலர் உதிக்கிறது. இரண்டாவது மலர் பூத்திட, அந்த செடிக்கு நீர்பாய்ச்சி, எருவிட்டுப் பாதுகாத்திடவேண்டும். அப்போதுதான் புதுமலர் கிடைக்கும்.

அதுமட்டுமல்ல நமது பணி! வாடிய மலரையே மீண்டும் மலரச்செய்ய முயல்கிறோம். அழுக்கடைந்த அமைப்புகளைச் சீர்செய்வது, திரிந்துபோன முறைகளைத் திருத்தி அமைப்பது, பாசிபடிந்த இடத்தைத் தூய்மை யாக்குவது, தேய்ந்த தத்துவங்களுக்கு உரம் ஊட்டுவது, குனிந்த உள்ளத்தை நிமிர்த்துவது, கூனிப்போன கொள்கையைச் சரிசெய்வது, இழந்த இன்பத்தைத் தேடுவது! இது எங்கும் நடக்கும் நிகழ்ச்சி. இதை மறுமலர்ச்சி என்று அழைப்பர் ஐரோப்பாக் கண்டத்திலே......"

மறுமலர்ச்சி நோக்கத்துடன் நாங்கள் எதனையும் ஆராய்கிறோம். சிலர் அந்த நோக்கத்தைத் தெரிந்துகொள்ளாமல் எந்தெந்தச் சமயத்திலே நாங்கள் எதை எதைக் குறை கூறுகிறோமோ, அந்தந்தச் சமயத்திலே நாங்கள் அவ்வக் கருத்துக்கு விரோதிகள் என்று கூறி விடுகிறார்கள்!"

இதுவரை அவரது பேச்சுக்களைக் கேட்டவர்களில் ஒரு சிலருக்கு, அண்ணாவுக்கு கலை இலக்கியம் என்றால் பிடிக்காதோ என்ற ஐயம் எழும்பி இருக்கும். அத்தகையவர்களுக்காக அண்ணாவின் விளக்க உரையைக் கீழே தருகிறேன்.

"......கலையைக் குலைக்கும் செயலல்ல எமது. கலையிலே புரட்சி உண்டாக்க விழைகிறோம்—தக்க காரணங்களோடு. கலை ஒரு இனமக்களின் மனப்பண்பு. அவ்வின மக்களிடையே தோன்றும் தெளிவு, வீரம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டு. எனவே கலை, இனவளர்ச்சிக்கு ஏற்றபடி, மாறியும் விரிந்தும் வருமென்பதே நுண்ணறிவினரின் துணிபு. கலை உலகில் அவ்வப்போது மாறுதல் உண்டாகும். இனத்துக்கோர் கலையும், இடத்தின் இயல்பு, தட்ப வெப்பம் ஆகியவற்றுக்கு ஏற்ற முறையிலும் கலை உண்டாகும், வளரும், மாறும்.

"......தமிழருக்குத் தமிழ் நெறி, தமிழ் முறை, ஒழுக்கம், வீரம், கற்பு, காதல் எனும் பண்புகளைத் தரக் கூடியன கலையாக இருத்தல்வேண்டுமே ஒழிய, வேறோர் இனத்தைப் புகழ்வதும் அதற்கு ஆதிக்கமளித்து, தமிழ் மக்கள் மனதிலே தன்னம்பிக்கையற்றுப் போகும்படியும், தமது இனத்தைப்பற்றியே தாழ்வாகக் கருதிக் கொள்ளும்படியான நிலைமை உண்டாக்கும் கதை, காவியம், இலக்கியம் என்பவைகளைக் கொளுத்த வேண்டுமென்று கூறுகிறோம். தமிழ் என்று நான் கூறும்போது, தமிழ்மொழி பேசுவார் என்பதை மட்டுமல்ல நான் குறிப்பது, தமிழ் இனத்தை என்பதை நினைவூட்டுகிறேன், ...எமது நோக்கம், கலையைக் கெடுத்தலுமல்ல, இலக்கியத்தை அழித்தலுமல்ல; கலைப்புரட்சி மூலம் இனஎழுச்சி, இன விடுதலை கோருவதே யாகும்......

கடைசியாக அண்ணாத்துரைக்கு ஒரு வேண்டுகோள் விட வேண்டியிருக்கிறது :

அண்ணாவே! மக்களை, விருப்பப்படி யெல்லாம் ஆட்டிவைக்கும் பாம்பாட்டிப் போன்றவரே! உங்களுடைய பேச்சுக்களை யெல்லாம் நீங்கள் ஒருதரம் நன்கு திருத்திப் பதிப்பீர்களாக. புதுப்புது விதத்தில்

புதிய புதிய கருத்தை வெளியிட்டுப் பேசுங்கள். அதுவே வீழ்ச்சி பெற்றுள்ள தமிழகத்தை வீறுகொள்ளச் செய்ய முன்னினும் பன்மடங்கு பயன்படும்.

7. உ. முத்துராமலிங்க தேவர்

"முத்துராமலிங்க தேவர் இன்று வருகிறார். நீ வருகிறாயா ?" என்றான் என் நண்பன்.

"யாரப்பா, அவர் ?" என்றேன் நான்.

"தமிழில் சிறந்த பேச்சாளர் ; காங்கிரஸ்காரர். சுபாஷின் முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்தவர்" என்று அவன் பதில் கொடுத்தான்.

* * *

கோகலே மண்டபத்தில் சொல்ல முடியாத கூட்டம். நானும் என் நண்பனும் கூட்டத்தின் இடியைச் சமாளித்துக் கொண்டு தகுந்த இடத்தில் அமர்ந்தோம்.

எனக்குப் புதியவரின் பேச்சைக் கேட்கவேண்டுமென்ற ஆவல் விநாடிக்கு விநாடி நீடித்துக்கொண்டே இருந்தது.

கூர்ந்து பார்க்கும் கண்கள்; துடி துடிக்கும் மீசை; உறுதியான உடல்கட்டு; நல்ல உயரமுள்ள அவர், 'இற்றை இளைஞர்களே' என்று தமது பேச்சைத் தொடங்கினர். 'புலவர்போன்று பேசுவாரோ புரியாதோ!' என்று நான் தொடக்கத்தைக் கேட்டபோது நினைத்தேன்.

என் பயம், கிளைகள் வெட்டிவிட்ட மரத்தைப் பேய் என்று கூவி, பின் தன் பகுத்தறிவாலும் நிதானத்தாலும் மரம் என்று கண்டு தெளிவோனைப்போல் மறைந்து போயிற்று! அவர், தமது இனிய செவ்விய பேச்சு நடையில், ஊசி விழுந்தால் ஒலி கேட்கும் அமைதி நிலையில் கூட்டத்தை நிலைக்கச் செய்து, அழகிய அடுக்குத் தொடர்கள் மூலமாகத் தமது கருத்தைத் தெரிவித்தார்.

அன்று அவர் வீரராயினர் நாட்டு மக்கள் செய்த அருஞ்செயலைச் சொல்லும்போது; கொதித்தெழச் செய்தார். அரசாட்சியினரின் அட்டூழியங்களை எடுத்துரைத்து; ஆழ்ந்த தமது அறிவைப் புலப்படுத்தினர் உலகின் நிலையை இயம்பி; வருங்காலத்தை அறியும் அறிஞரானர் எதிர்காலத்தைச் சுட்டிக் காட்டி. ஆம்! அவரது பேச்சு அத்தகையதாக அமைந்து இருந்தது. அன்று அப்பேச்சைக் கேட்காத அன்பர்கள் அவரது பேச்சையே கேட்டுத் தெளியட்டும்:

"முன்பு இந்தியாவில் நிராயுதபாணிகளாக இருந்தவர்கள் மீது கடுமையாகவும், மிருகத்தனமாகவும், ஆகாய விமானமூலமாகவும் ஆயுதங்களைக் கொண்டு தாக்கியவர் ஜெர்மனியரோ ஜப்பானியரோ இத்தாலியரோ, மற்ற வேறெந்த நாட்டினரோ அன்று. இப்படிச் செய்தவன் வெள்ளையனே.

நிராயுதபாணிகள் மீது விமானமூலம் குண்டு வீசலாமா என்று சர்வதேச சங்கம் கேட்டபோது, அம்மாதிரி செய்திரா விட்டால் நீதியை நிலைநாட்டி இருக்கமுடியா தென்று சொன்னார்கள். செய்ததை அனுபவித்துத்தான் ஆகவேண்டுமென்று ஆஸ்திகர்கள் கூறுகிறார்கள்! நடக்க வேண்டியதற்கான நியதி ஒன்றிருக்கிறது. இதே வெள்ளை யர்கள் மீது ஹிட்லர் குண்டு மழை பெய்து மாட மாளிகை கள் கூட கோபுரங்கள் முதலியனவற்றை இடித்துத் தூள் தூளாக்கினான். ஆகஸ்டு சுதந்திரப் போராட்டக்காலத்தில் நம் கிராமங்கள் பல குடிசைகள் இழந்து வெட்ட வெளியாகி குட்டிச்சுவராயின.

இங்கிலாந்தின் இப்போதைய நிலைமை என்ன? அங்கு குடியிருக்கவும் வீடின்றி மக்கள் தவிக்கின்றனர். தேவைக்கான வீடுகள் கட்டவும் போகிய சாமான்கள் அங்கு இல்லை. ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்ய லாமோ வென்றால் அங்கும் அவை கிடைப்பதில்லை. இருந் தாலும் கொடுக்க பிரிட்டன்மீது யாருக்கும் நம்பிக்கையில்லை! நாணயச் செலாவணியில் நம்பிக்கை குறைவும் சிக்கலும் ஏற்பட்டிருக்கின்றன. அமெரிக்காவிலிருந்து கட்டிய வீடு களை இறக்குமதி செய்து அவைகளைப் பிரிட்டனில் வைத்து வாழும் நிலைமையில் பிரிட்டிஷார் இன்று இருக்கின்றனர். நம் நாட்டு நரிக்குறவர்கள் வாழ்க்கை நிலைமைதான் இது. வெற் றியால் கண்ட பயன் இதுதான்!!"

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்ற நியதி யின்படி, வெள்ளையர்கள் முன்னாளில் தாம் செய்த கொடுஞ் செயல்களுக்கு ஏற்ற பலனைப் பின்னாளில் பெற்றதையும், இருந்து வாழ வீடின்றித் திண்டாடித் தவித்ததையும் தேவர் மேலே குறிப்பிட்டுள்ளதைக் கண்டோம். ஏளனமும் ஆத்திரமும் உடன் கலந்து சொற்களாக வெளிவந்திருப் பதையும் அறிந்தோம். இனி நாணயச் செலாவணியைப்

பற்றியும் அணுகுண்டைப்பற்றியும் அவரது கருத்தை அறியலாம்.

"நாணயச் செலாவணி விஷயத்தில் பெரிய சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. 1930-ல் பொருளாதார மந்தம் ஏற்பட்டபோது காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. நிலைமையைச் சமாளிக்க பிரிட்டிஷார் செய்து கொண்ட தந்திரமே இது...

" அணு குண்டினால் இன்று ஏதோ யுத்தம் முடிந்து விட்டது. இது வெற்றியா? நிரந்தர வெற்றியா ? நிரந்தர சரணாகதியா? அணுகுண்டு கண்டு பிடித்தது அமெரிக்கா தானா என்ற சந்தேகம்உண்டாகி யிருக்கின்றது. இந்தக் கடுமையான ஆயுதத்தை வெள்ளையர் அல்லாதவர்மீது அமெரிக்கா வீணாக உபயோகித்திருக்கிறது. 'இந்தக் குரங்கு' சேஷ்டை நீண்டநாள் உங்கள் கையில் இருக்குமா என்ற சூசகமான கேள்வி ஒன்றை அறிஞர் பெர்னார்ட்ஷா கேட்டிருக்கிறார். 'நாம் வசிக்கத் தகுந்த இடம் பாதாள அறைகளே' என அமெரிக்கத் தலைவர் ட்ரூமன் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது. ஏன் அப்படிக்கூறினார்? தான் செய்த தீங்கு தனக்கே வருமென எச்சரித்திருக்கிறார். உயிருக்குத் துணிந்து நிற்பவர்களுக்கு இவ்வித பயமுறுத்தலால் என்ன பீதி எற்படப் போகிறது?

"மரணம் ஒரு சிறிய மாயை. தென்னை மரத்திலிருந்து விழுந்து பிழைத்தோருமுண்டு! புல்தடுக்கி விழுந்து இறந்தோருமுண்டு! கசையடிக்குப் பயந்து கொண்டிருந்த நாம் 1942ல் சாதித்தவைகளைப் பார்த்தால் கோழைகளல்ல என்பது தெரியும்... முரட்டுத்தனம் வீரமாகாது; படித்ததெல்லாம் அறிவாகாது; யாழ்கையெல்லாம் இன்பமாகாது.

"அரசியல் பெரியோர்கள் அறிவாளிகள் என்று கூறப்படுகின்றவர்கள் பிற்போக்கிலிருக்கிறார்கள். மோட்டா

ருக்குப் பின் 'கீர்' போடுகிறார்கள். பெரிய தலைவர்கள் இந்த விபரீதப் போக்கை நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல் நிறுத்தும்படி இளைஞர்களும் தொண்டர்களும் சொல்ல உரிமை உண்டு; சொல்லத்தான் வேண்டும்...

ஆசிய மக்கள் சுதந்திரதாகம் கொண்டுள்ள நிலையில், இந்தியா வழிகாட்டுமென்று ஏற்பட்டுள்ள எழுச்சியில் வேகமான கிளர்ச்சியில், எதிர்நோக்கி வரும் புரட்சியில் சேருங்கள். சேராவிட்டாலும் புரட்சி வேகத்தில் நசுங்கிப் போய்விடாமல் உஷாராக இருங்கள்"

காந்தி இர்வின் ஒப்பந்தத்தின் உள்ளார்ந்த சூழ்ச்சியும் ஆசிய மக்களின் வீரச் செயல்களும், அணுகுண்டினால் ஏற்பட்டுள்ள மாறுதல்களும், தலைவர்களின் பிற்போக்கும், தேவரின் தன்னம்பிக்கையும் அஞ்சாமையும் இணைந்து வந்த ஆழ்ந்த கருத்துக்களும் விரிவான அந்நாள் பேச்சில் காணக் கிடக்கின்றன. சுபாஷின் ஆங்கிலப் பேச்சைக் கேட்டவர்கள், தமிழில் அவரேபோன்று பேசுகிறார் இவர் என்று சொல்லாமல் இரார்.

இன்று திராவிடர் கட்சிக்கு அண்ணாத்துரை பெருந்தூணாக விளங்குவதுபோல், தேசிய முற்போக்கு கட்சிக்கு முத்துராமலிங்க தேவர் தமிழ் நாட்டில் ஒரு பேரரணாக இருக்கிறார். அண்ணாவும் தேவரும் தமிழ் நாட்டின் பேச்சாளர்களில் இரு கண்மணிகள் போன்றவர்கள்.

தேவரிடம் வீரஞ்செறிந்த சொற்கள் புகைந்து எரிந்து அனல் குமிழிகளை எழுப்புகின்றன. அண்ணாவின் பேச்சிலே ஆத்திரம் காணப்படாது; அழகு காணப்படும்; கடுஞ்சொல் காணமுடியாது. ஆனால் கையாண்டி வேலினும் கொடியதாக இருக்கும். தேவரிடத்திலே நகைச்சுவை

அண்ணுவைப்போல் அதிகம் கிடையாது. ஓரிடத்தில் சொன்னதையே திருப்பிச் சொல்லும் முறையை தேவர் மாற்றிக் கொள்வது நல்லது.

இன்று கட்சி அளவில் அவர்கள் இருவரும் வடமுனை தென்முனை போன்று இருக்கிருர்கள். முற்போக்கு கருத்தில் அவர்களிருவரும் ஓரே நோக்கம் உடையவர்களாகக் காணப்படுகிருர்கள். ஒருவர் அரசியல் புரட்சியை முன்பு காணவேண்டுமென்கிருர். மற்றவர் சமுதாயப் புரட்சியைக் காண முனைந்து வேலை செய்கின்ருர். பொதுவாக ஆக்க வேலைக்காக இருவரும் அறியாமையைக் கல்லி எடுக்க முன்வந்து இருக்கிருர்கள்.

இருவருக்கும் ஓரே மாதிரியான நிலம் இருக்கிறது. ஆனல், உழுது பயிரிடும் முறையில்தான் வேற்றுமை எழுந்திருக்கிறது. திரு. வி. க. சொல்வதுபோல் இவ்விருவரும் "பன்மையில் ஒருமையைக் காண்பாரே" யாகில் தமிழ் நாட்டிற்கு நல்ல பலன் உண்டாகும் என்பது உறுதி.

தமிழ் நாட்டின் விளைச்சலை அள்ளப்போகும் நாம்தான் —இளைஞர்கள்தான்—நமக்கு வேண்டிய விளைபொருள்களை அவர்கள் உழுது பயிரிடும்படி சொல்ல வேண்டும்; செய்ய வேண்டும். இம் முயற்சிக்கு சமர்த்தர்கள்தானு 'இற்றைய இளைஞர்கள்'?

9. ப. ஜீவானந்தம்

" தனிவுடைமையினாலே தொல்லையாம் –
அதைத் தகர்த்தபேர்க்கு
தாழ்வும் துயரும்வீழ்வுமில்லையாம் "

'நந்தனார்' பாட்டை ஒட்டி எழுதப்பட்ட 'கிந்தனார்' பாட்டல்ல இது. புதிய பார்வை பார்ப்பவர்களுக்குப் புதிய நந்தனார்கள் தேவைதான் என்றாலும், இப்பாட்டைப் பாடியவர் நந்தனாரல்ல, பொது உடைமைக் கட்சித் தோழர் ப. ஜீவானந்தம் என்பதைத் தெரிவித்து விடுகிறேன்.

மக்களிலே பலர் தாம் இருந்த இடத்திலே இருந்து ஓர் அங்குலம்கூட நகர்வதில்லை. கல்லுப் பிள்ளையார் (மனிதப் பிள்ளையாரும் இருக்கிறது!) மாதிரி அசையாமல் இருந்து விடுகிறார்கள். சிலர்தான் தூற்றலுக்கும் கொடுமைக்கும் அஞ்சாமல் தம் நெஞ்சம் செல்லும் வழியில் போகின்றனர். தாம் கொண்ட கொள்கையின் பொருட்டு "உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்" அச்சமில்லை அச்சமில்லை என்றிருப்பார்கள். ஜீவானந்தத்தின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தவர்களுக்கு நன்கு தெரியும், அவர் எப்படி இளமை முதற்கொண்டு முன்னேற்றத் துறையில் புகுந்து, கிறுகிறுவென்று வளர்ந்திருக்கிறார் என்று.

நாடு உரிமை அடைய வேண்டும் என்பதற்காக 'ஜீவா' போராடியதும் போராடிக் கொண்டிருப்பதும், 'அழிந்து விட்டது, மறைந்து வருகிறது' என்று பசப்பிக் கூறும் சாதிக் கொடுமையின் முதலைப் பிடிப்பை உடைத்தெறிவதற்காகத் (தீண்டாமையைப் பாராமல் சமரசம் காட்டியதற்காக)

தம் வீட்டையும் உறவினரையும் விட்டுத் துறந்தும், உதட்டில் உரிமை முழக்கமும் உள்ளத்தில் பிறரை அடிமைப்படுத்தியே வாழவேண்டும் என்ற கருத்தினுல் சாதி முறைப்படி மாணவர் சமமாக உட்கார்ந்து உண்ணக் கூடாது என்று பிடிவாதம் பிடித்த வ. வெ. சு. ஐயரின் 'எரிகிற கொள்ளியை'ப் பிடுங்கிவிடத் துணைபுரிந்ததும், முதலாளி—தொழிலாளிப் போரை முன்னிலும் பன்மடங்கு வலுவடையச்செய்து, தொழிலாளரின் கட்டுப்பாட்டைப் பெருக்கி, அறிவைத் தூண்டி உழைப்பின் பெருமையை அறியச் செய்து வருவதும், தமக்குப் பிடித்த கொள்கைக்காக விடாது போராடுபவர் என்பதை நன்கு தெரியப்படுத்துவனவாகும்.

மக்களின் பிற்போக்கிற்கு எதிராக முற்போக்குக் கொள்கைகளைப் பரப்பியதற்காக அவருக்குக் கிடைத்த வெகுமதிகள்—கல்லடியும், சாணியடியும், கத்திக் குத்தும் தான். என்றாலும், எத்தகைய இடையூறையும் எதிர்த்து நிற்கும் ஆற்றல் அவருக்கு இயல்பாக அமைந்திருப்பதை அவர் முகத்தோற்றத்தைக் கொண்டே நாம் அறிந்துவிடலாம். தன் கைகளைச் சுட்டிக் காட்டும் பழக்கமும், உணர்ச்சியோடு பேசும்போது பிதுங்கி வெளிவந்து விடும் போல் தோன்றுகின்ற கண்களும், ஆடும் உடலும், அடர்ந்த மீசையும், புள்ளி விவரங்களுடன் விளக்கிச் சொல்லும் தனிக்குணமும் ஜீவானந்தத்தின் சிறப்பாகும்.

"பாடுபடு முத்தமன் அடிமைப் பிராணி"யாகவும், "பழுத்த சோம்பல் திருடன் அருந்திரு மேனி"யாகவும் "கேடுசெய் கயவனே பிரபல ஞானி"யாகவும் இன்றைய சமுதாயத்தின் அழியாச் சித்திரமாக இருப்பது அவருக்கு

எப்படிப் பிடிக்கும்? எனவேதான் அவர் சமதர்மத்தில் "வேலையொன்றே மதிப்பு—வெட்டி யரட்டை பழிப்பு" மாக இருக்கும் என்று கூறுகிறார்.

> தொன்றுதொட் டின்றுவரை பாட்டாளி யுழல்கின்ற
> துயரக்கடற்கு வித்து
> ஒன்றுபட்டோங்க எழும் தொழிலாள ராசைக்கு
> உருப்படா மதம் விபத்து"

என்று அவர் நன்றாக கண்டு தெரிந்துள்ளார்.

தொழிலாளி உலகை கண் தெரியாத ஒரு பூதமாக உருவகப்படுத்தி, அவர்களின் உழைப்பால் மலைகள் அழிந்து வழிகள் அமைவதும், தொழிற்சாலைகள் ஆலைகள் போக்கு வரவுகள் நடைபெறுவதும் அறியாது, தம் உழைப்பின் பயனை ஒரு சிறிதும் நுகராது, உண்ண உடுக்க படுக்க இடமின்றித் தவிப்பதையும் எடுத்துக் கூறி, தொழிலாளி களின் பேருழைப்பின் மேன்மையை அறிந்த ஒருவன் (லெனின்) அவர்களின் அறியாமைக் குருட்டை தனது சமதர்மம் எனும் குறட்டால் மாட்டி யிழுத்து நீக்கினான் என்று கருத்தாழத்தோடும் உணர்ச்சியோடும் ஜீவானந்தம் லெனின் தினத்தில் அன்றொரு நாள் பேசினார். அப் பேச்சுக் குறிப்புக் கிட்டியிருந்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும். கேட்டும் கிடைக்கவில்லை. எனவே, கருத்தை மட்டும் கொடுத்திருக்கிறேன்.

காங்கிரஸ் மேடைகளிலும், சுயமரியாதைக் கூட்டங்களி லும், பொது உடைமை அரங்குகளிலும் இதுவரை அவர் ஆயிரக்கணக்கான சொற்பொழிவுகள் செய்துள்ளார். நாட்டு விடுதலையும், அதற்கு முட்டுக்கட்டையாக உள்ள சாதி சமயப் பிணக்குகள் அழிப்பும், எல்லாவற்றையும்விட

தனிஉடைமை ஒழிந்து பொது உடைமை ஆட்சி ஏற்படுத்து வதும் அவரது தணியாத ஆசையாகும். ஒவ்வொன்றிற் கும் அவர் நிரம்பத் தொண்டாற்றி வந்திருக்கிருர்.

தமிழ் உணர்ச்சியும், உலகப் பொதுநோக்கும் கொண்ட ஜீவானந்தத்தின் சொற்பொழிவைக் கேட்போம்.

> "வாழ்க்கைப் பிரயாணத்தில் ஏற்பட்டிருக்கிற குலையை நடுக்கும் பேரிடிகளுக்கும், அறிவைக் கிழித்தெறியும் மின் னற் கொடிகளுக்கும், உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் ஒரே உலுக்காயுலுக்கும் அதிர்ச்சிகளுக்கும், கொதித்துக் கொப்பளித்துக் கொந்தளித்து அக்னிக் குழம்பை அள்ளி யள்ளி இறைத்து நினைவைச் சிதறியடிக்கும் எரிமலைக்கும், குதித்தெழுந்து கரைபுரண்டு கட்டுகளையும் முட்டுகளையும் உடைத்தெறிந்து கடுவேகத்தில் தாறுமாருய்ப் பாய்ந்து அட்ட காசஞ் செய்யும் வெள்ளப் பெருக்கங்களுக்கும், ஊழிக் கூத்துக்களுக்கும் ஆட்பட்டும் தலைகொடுத்தும் ஜனசக்தி— ஜனசமூக சக்தி—சரித்திர பூர்வமாகத் தேய்ந்து போகாது, மாய்ந்தொழியாது இன்றும் முன்னைவிடப் பன்மடங்கு வண்ணமுற நிற்கின்ற தென்பதுதான் அறிவின் முடிவும் அனுபவத்தின் தீர்ப்புமாகும். இதன் காரணமென்ன? ஜனசக்தி வற்ருத புரட்சிக் களஞ்சியமென அறிக."

ஜனசக்தியின் உயர்வை தமது சூருவளித் தமிழில் அவர் சித்தரித்ததை இதுவரை கேட்டோம். நாடு முன் னேற எவையெல்லாம் ஒழியவேண்டும் என்பதற்கு ஜீவாவின் அறிவுரையை இனி பார்ப்போம்.

> "இந்த நாட்டிலே ஏகாதிபத்ய எஜமானர்களுக்கு முத லாளி வர்க்கம் ஓரளவு அடிமை; முதலாளி வர்க்கத்திற்குப் பாட்டாளி மக்கள் அடிமை. அவர்களில் ஆண்களுக்கு பெண்கள் அடிமை......அடிமைக்கும் அடிமையாக அல்லவா பெண் காலந் தள்ளுகிருள்?......

"பிரபுத்துவம் தோன்றியதும் புத்தம் புதிய சமூகச் சட்டங்களும் சம்பிரதாயங்களும் புகுத்தப்பட்டன. இந்த அரண்களினுள் ஒளிந்து இருந்துகொண்டு, ஆண்கள் உரிமைக்கதிகமான சௌகரியங்களை அனுபவிக்கிறார்கள். மதங்கள், இந்தப் புதிய சமூக அமைப்புடன் இரண்டறக் கலந்து நிற்கின்றன; இதன் அதிகாரிகளுக்கு ஒத்து ஊதுகின்றன; அந்த அமைப்பை ரட்சிக்கும் பொருட்டு தெய்வீக அனுமதிகளைச் சிருஷ்டிக்கின்றன; இதுவரையில் பெண்மக்களைப் பிணைத்திருந்த அடிமைச் சங்கிலிகளை இன்னும் பலமாக இறுக்கிப் பிணைக்கின்றன. இதனுடைய முக்கிய குணாதிசயம் ஆணைச் சயவாதிகாரியாகவும் பெண்ணைக் கொத்தடிமையாகவும் செய்திருக்கிறதுதான்.........

"சாரமற்ற சடங்குகளும், பாசிபடர்ந்த சம்பிரதாயங்களும், அந்து அரித்துப்போன பழக்க வழக்கங்களும், நொறுங்கிக் கிடக்கும் விதிகளையும் கொண்ட சமூக வாழ்வு, சீர்திருத்தப்படாத வரையில் தேச முன்னேற்றம் ஏற்படுமா? குப்பை கூளங்கள் அப்படியே இருக்க, முன்னேற்றமென்பதற்கு அர்த்தமுண்டோ?......வண்ணான் வெளுவெளென்று வெளுத்துத் துணிமணிகளிலுள்ள அழுக்கைப் போக்குவது போல் அசுத்தப்பட்டுக் கிடக்கும் சமூக வாழ்வையும் சட்டத்தால் உதை உதையென்று உதைத்து மூடச் சம்பிரதாயங்களையும் குருட்டுப் பழக்கங்களையும் போக்கி, வாழ்வைப் புதுப்பித்து முன்னேற்ற வேண்டும்,"

"ஏகாதிபத்தியத்தின் ஈரக்குலை"ப் பிடுங்கி எறிய வேண்டும் என்று ஆவேசத்துடன் சொல்லும்போது ஜீவானந்தத்தின் உடல் தோற்றத்தைக் காணவேண்டுமே! அம்மம்ம! மிக பயங்கரமாக இருக்கும்!! இந்தியாவிலே தாய் மொழியில் பேசி உணர்ச்சியைத் தூண்டிவிடக் கூடியவர்களில் "அபாயகரமானவர்கள்" என்று கருதப்பட்ட மூவர்களில் நம் ஜீவானந்தமும் ஒருவராவர் என்றால் அவரது

பேச்சின் பெருமையை அறிய வேறு என்ன சான்று வேண்டும்.

"சோற்றால் அடித்த பிண்டங்கள்" "குண்டோட்டம் குதிரை ஓட்டம்" "குண்டும் குண்டாந்தடியும்" போன்ற தொடர்கள் அவரது பேச்சுக்குத் தனி அழகையும் வேகத்தையும் தந்து உதவுகின்றன.

தொழிலாளர்கள் இடையில் ஜீவானந்தம் விடாமல் தொண்டாற்றி வருவதால், அவர்களுக்கு ஏற்றாற்போல் தமது பேச்சை மாற்றிக் கொண்டிருக்கிறார். இல்லையெனில் அவர் சிறந்த தனித்தமிழ் பேச்சாளராக மாறியிருப்பார்.

வேறு எந்தப் பேச்சாளர்களைவிட தீவிரமான கருத்துக்களை மக்களிடம் எடுத்துரைத்து அதனால் உண்டான விளைவுகளை ஓடாமல் அஞ்சாமல் ஏற்றுக்கொண்டவர் ஜீவானந்தம்தான் என்பதைத் துணிந்து கூறலாம். உணர்ச்சியைத் தூண்டும் பேச்சு, பேச்சுக்கேற்ற செயல், எதிர்ப்புக்கு அஞ்சா ஆண்மை, இளகிய மனம் இவற்றைத் தன் இயல்புகளாகக் கொண்டுள்ள ஜீவாவின் பேச்சு ஒன்றுகூட இன்னும் மக்களிடையே நூல் வடிவாக வரவே இல்லை. அவரோ மற்றவர்களோ அப்பணியை மேற்கொள்ள வேண்டும் என விரும்புகிறேன். பேச்சாளராக மட்டும் நில்லாமல் கவிஞராகவும் உள்ள ஜீவாவின் பாட்டோடு இதை முடித்துக் கொள்கிறேன்.

"இழிந்தோம் இழிந்தோம் இழிந்தோம்—இன்னும்
சொந்த மதி யிழந்தோம் சூழ்ச்சி நம்பத்துணிந்தோம்
வந்தபல னடிமைதான்
அடிமைதான் அடிமைதான் அடிமைதான்"

10. ம. பொ. சிவஞானம்

இரண்டாண்டுகளுக்கு முன் சிவஞான கிராமணி என்றால் ஒரு சில பகுதிகளில் மட்டுந்தான் தெரியும். இன்றைய நிலை அப்படியல்ல. தமிழ்நாடு முழுவதும் விரும்பி விரும்பி அழைக்கும் பேச்சாளர்களில் ஒருவராக அவர் திகழ்கிறார். வெகு குறைந்த காலத்திற்குள் இவ்வளவு புகழ் அடைவதற்கு அவரிடமுள்ள பண்புகள் என்ன? இதனை நாம் சற்று அறிவோமானால் அவரது சிறப்பியல்புகளை நன்கு தெரிந்துகொள்ள முடியும்.

"தமிழ் நாடு தமிழர்க்கே!" என்று வானை எட்டும் பெருமுழக்கம் ஒரு சில ஆண்டுகளுக்குமுன் கிளம்பிய போது 'எலிவளை எலிகளுக்கே' என்று 'சில நல்ல தமிழர்' எள்ளி நகையாடினர். எந்த வட்டாரத்திலிருந்து எதிர்க் குரல் வந்ததோ அந்த வட்டாரத்தில் பலர் (சிலர் இன்னும் தயங்கினாலும்) இன்று "தமிழ் நாடு தமிழருக்கே" என்ற முழக்கத்தை முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் பெரும் அளவில் ஒப்புக்கொண்டுள்ளனர்.

'விழுங்கவும் முடியாமல் மெல்லவும் முடியாமல்' இருக்கும் நிலையில் காங்கிரஸ் வட்டாரத்திலிருந்து 'தமிழ் வாழ்க', 'தமிழ் நாடு வாழ்க', 'தமிழினம் வாழ்க' என்று வாழ்த்தும் அன்பர் சிவஞானத்தை மக்கள் மிகவும் பாராட்டி வரவேற்கின்றனர். கட்சிக்காகவும், தூற்றலுக் காகவும் அஞ்சாமல் பழைய முழக்கத்தை மீண்டும் எழுப் புபவர்மீது மக்கள் இதயம் ஒன்றாமல் வேறு என் செய்யும்? ஆனவே தான் கிராமணியார் பேச்சுக்குப் பொதுவாக நல்ல

செல்வாக்கு ஏற்பட்டுள்ளது. வேறொன்றும் அவருக்குத் துணை செய்கின்றது:

தமிழ் நாட்டின் இன்றைய அரை விழிப்பு நிலையும், முன்னிலும் பக்குவமடைந்து மெருகு ஏறிவரும் கிராமணி யாரின் பேச்சும் அவரது புகழுக்கு உரஞ்செய்கின்றன.

கிராமணியார் பேசத் தொடங்குமுன் கூட்டத்திற்கு வணக்கஞ் செலுத்திவிட்டு, மெதுவாகப் பேசத் தொடங்கு வார். சில நிமிடங்களுக்குள் உரத்த குரலுடன் முழக்க மிடுவார். நடுநடுவே அவர்க்கே உரிய பல வெடிகுண்டுகளை போட்டு போட்டு மக்களின் மனதைக் கவர்ந்து விடுவார்.

அச்சுக் கோக்கும் தொழிலாளியாக இருந்த அவர் உரிமை வேட்கையால் ஈர்க்கப்பட்டு, தன் விடா முயற்சியால் படித்துத் தெளிந்து, இன்று முன்னணிக்கு வந்துள்ளார். இதுவரை அவர்பட்ட பாடெல்லாம், கண்டு தெரிந்த அனு பவமெல்லாம் அவரது பேச்சின் வாயிலாக வெளிவருகின் றன. அவற்றை நாம் சிறிது நேரங் கேட்டால் என்ன? கேட்போம்.

"ஒருவன் உணவின்றி குடும்பத்துடன் குமுறி அழ இன்னொருவன் ஐந்து தலைமுறைக்கும் வருகின்ற அளவுக் குப் பொருளைச் சேமித்து வாழ்கின்றானே, அது கள்ளச் சிந்தையல்லவா?

ஏழைத் தொழிலாளி உடலுருக உழைத்தபின் உழைப்புக்கேற்ற ஊதியம் தராமல், அவனது உழைப்பைக் கவர்ந்து வாழும் முதலாளி—ஜமீன்தார் அடைவது கொள்ளை லாபமல்லவா? இந்தக் கள்ளச் சிந்தையும், கொள்ளைச் சந்தையும் மட்டும் சட்டச் சம்மதம்—தெய்வத்தின் திரு வருள் போலும்!

பாட்டாளி — பஞ்சமன் — பாடுபட்டும் உணவின்றி, உடையின்றித் தலைமுறை தலைமுறையாக உள்ளங் குமுறிய போதெல்லாம், அவனை வாழவைக்க சர்க்காரிடமிருந்து சட்டம் புறப்படவில்லை. தனியுடைமையாரின் தயவு தோன்றவில்லை; கட்சிகளுக்கும் கருணை பிறக்கவில்லை. ஏழை துன்புற்றால், அது அவன் தலைவிதி; முன்ஜென்ம பாவம்; தெய்வத்தின் கோபம். பாட்டாளி மகன் பண்டம் வாங்கப் பணமில்லாமல் பசித்திருக்கும்போது—பருத்தி ஆடைக்குப் பரிதவித்தபோது பார்த்திருந்த உலகம், இன்று படித்தவனுக்குப் பாலன்னமில்லை யென்றால், பணக்காரனுக்குப் பட்டாடை இல்லையென்றால் பஞ்சமெனக் கூறி பரிவு காட்டுகிறது.

உண்மை யென்ன? அறிவை முதலாகக் கொண்டவன் அரசாங்கத்தை நடத்துகின்றான்; பொருளை முதலாகக் கொண்டவன் பொது மக்களின் தலைவனாக விளங்குகின்றான். இவ்வளவு நாள் பாமரனை வாட்டிய பஞ்சம் படிப்பாளியையும் பணக்காரனையும் பதம் பார்க்கத் துணிந்துவிட்டது. ஆகவேதான், 'தலைவிதி' தன் முயற்சியாக மாறிவிட்டது. பாவம் 'பஞ்சமென'ப் பெயர் கொண்டுவிட்டது! பொல்லாத உலகம்!

இனியேனும், 'தலைவிதி' மாய்ந்து தன் முயற்சி வாழுமா? படித்தவன்—பணக்காரன் பஞ்சத்தோடு பாமரனின் வறுமையும் தொலையுமா?"

பொல்லாத உலகத்தைக் காணுந்தோறும் காணுந்தோறும் கிராமணியாரின் பாட்டாளி மனப்பான்மை, நெடுநாள் பொறுத்திருந்து தாளாமல், திடீரென்று வெடித்துக் கொட்டியுள்ள உள்ளக் குமுறல் மேலே காண்பவை. ஏழைக்கொரு நீதியும் படித்தவனுக்கும், பணக்காரனுக்கும் ஒரு நீதியும் இருக்கக்கூடாது என்று வற்புறுத்திக் காட்டுவதில் தான் எவ்வளவு உண்மை பொதிந்திருக்கிறது!

நம் நாட்டின் பெரும்பான்மை மக்களின் உண்மை நிலையை அவர் எடுத்துக்காட்டிப் பேசியுள்ளதைப் படிக்கும் போது அவரது அடி வயிற்றிலிருந்து கொதித்தெழுந்து வரும் கடுஞ் சொற்களை நாம் காணுமற் இருக்கமுடியாது. இன்சொல்லால் கெஞ்சியும், விம்மியும் பலனில்லை என்றால், பாட்டாளியுள்ளம் ஆத்திரங் கொள்ளாமல் வேறு அமைதி யாகவா இருக்க முடியும்?

'என்ன' என்று அழுத்தி நிறுத்திச் சொல்லும்போது அவரை நாம் பார்க்கவேண்டும். கண்கள் சினப்பொறி களைச் சிந்தும். வளர்ந்து மடிந்துள்ள மீசை துடிதுடித்து நிமிரும். கைகள் அழுந்தும். நன்றாகச் சொல்ல வேண்டு மானல் அன்று செய்வது இன்னது என்று அறியாது வெகுண்டு எழுந்து மதுரையைத் தீமூட்டச் செய்த கண் ணகி போல் அவர் காட்சி யளிப்பார்!

போர் நிறுத்தப்பட்ட பிறகு இந்நாடு முழுவதும் வேலை நிறுத்தங்களும், முதலாளி-தொழிலாளி பூசல்களும் ஆங் காங்கு தலைகாட்டுகின்றன. இதை ஒரு சிலர் தூண்டி விடும் செயல்கள் என்று புகார் செய்கின்றனர். அவை எப்படி ஏற்படுகின்றன? உண்மை என்ன? அன்பர் சிவ ஞானம் கூறுவதைக் கேட்போம்:

"எழுபது வருடங்களாக நடத்திவரும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரின் மத்தியில் பாட்டாளியின் பகுத்தறிவு வளர் பிறைபோல் வளர்ந்துகொண்டே வந்தது. இதன் விளைவாகத் தனது பட்டினிக்குக் காரணம் தலைவிதியல்ல தனியுடைமை; தனக்கு வேண்டியது சொர்க்கமல்ல— சுகவாழ்வு என்பதைத் தொழிலாளி தெள்ளத் தெளிய உணர்ந்தான். நாட்டின் அடிமைத்தனத்திற்கு ஏகாதிபத்

தியம் காரணமாக இருப்பதுபோல் தொழிலாளி வர்க்கத்தின் தொல்லைகளுக்கெல்லாம் முதலாளித்துவமே முக்கிய காரணம் என்ற உண்மையும் அவனுக்குப் புலனாயிற்று. ஆகவே, ஏகாதிபத்தியத்தை வைக்கும் குழியில் முதலாளித்துவத்தையும் வைத்து மூடிவிட வேண்டுமென்று அவன் துடியாய்த் துடிக்கிறான். அதன் விளைவுதான் தற்போது தோன்றியுள்ள வேலை நிறுத்தங்கள். இதைக் கண்டு ஆத்திரப்படுவது அறிவுடைமையாகாது; தேசபக்தியுமல்ல."

அவர் ஒரு காங்கிரஸ் தமிழர். எனவேதான் இன்று அவர் 'சுதந்திர இந்தியாவில் சுதந்திரத் தமிழரசு; தமிழகத்தின் அரசியலை தமிழரே தயாரிக்க சுய நிர்ணயம்' என்று முழக்க மிடுகின்றார்.

தன் கட்சிக் கருத்துக்கும், தன் கருத்துக்கும் அல்லது இன்றைய பொது மனப்போக்கிற்கு ஊனம் ஏற்படாத வகையில் எவ்வளவு அளந்து பேசக்கூடுமோ அந்த அளவிற்கு கிராமணியார் மிகத் திறம்படப் பேசிவருகிறார்.

அவரது பேச்சிலே அவ்வப்போது ஏற்படுகின்ற அரசியல் நடைமுறைகளையும் உரிமைக்கும் உயிர்க்கும் போராடுகின்ற பாட்டாளியின் துயரக் குமுறல்களையும் நம்மால் கேட்கமுடிகிறது. உரிமை வேட்கை மிகுந்துள்ளதால் அவர் காங்கிரஸ்காரர். பொருளாதார புரட்சியை நாடுவதால் அவர் ஒரு பொது உடமைக்காரர். புடம்விட்டுச் செல்லும் சமுதாயக்கொடுமையைப் போக்க மெல்ல மெல்ல அடியெடுத்து வைப்பதால் சுயமரியாதைக்காரர். உடனடியாக இந்நாட்டில் ஏற்படக்கூடிய முக்கூட்டு மாறுதல்களுக்கும் தன்னைப் பக்குவப்படுத்திக்கொண்டு வரும் தொண்டராக கிராமணியார் இருக்கிறார்.

கிராமணியாரின் பேச்சிலே எதுகைமோனை இயல்பாக வருமிடங்கள் உண்டு. செயற்கையாக வருமிடங்களும் உண்டு. கேட்கும் மக்களைக் கவர்வதற்காகப் பேச்சாளர்கள் சிற்சிலசமயங்களில் அடுக்குத் தொடர்களையும், எதுகை மோனைகளையும் கையாள வேண்டி யிருக்கிறதென்பது உண்மையே. ஆனால் எல்லா பேச்சுக்களிலும் அவ்வாறு நடைமுறைக்கு கொண்டுவந்து விடுவதால் அவர்களுக்கும் கருத்தோட்டம் தடைபடும்; கேட்பவர்களுக்கும் சலிப்பு ஏற்பட்டே தீரும். இதைச் சற்று கிராமணியார் கவனத்துக்குக் கொண்டுவருகிறோம்.

பழமையில் வெறுப்பும், புதுமையில் விருப்பும் கொள்ளுதல் மக்களின் தடுக்க முடியா இயல்பு. கிராமணியாரும் கால வெள்ளத்தோடு இணைந்து தம் முழக்கத்தைப் அவ்வப்போது புதுக்கிக்கொள்ள வேண்டுகிறோம்.

3641

பேச்சு
இசை
நடனம் —— கலைக்கு
நாடகம்

உறைவிடம்

வானொலி!



ஆல்பா (Alba) பெர்ராண்டி (Ferranti) அம்பாஸடர் மர்பி (Murphy) ஜெனித் (Zenith) பெர்கூசன் (Ferguson) இன்னும் எல்லாவித ரேடியோக்களும், எக்ஸ்ட்ரா லௌடு ஸ்பீக்கர்களும் (Extra Loud Speaker), கிராமபோன் பிக் கப்களும் (Pick up) ஏரியல் வையருக்களும் இன்னிடம் நியாயமான விலைக்குக் கிடைக்கும்.

ஜி. முனிவேலு "நேதா மியூசிகல்"
ரேடியோ வியாபாரி

250, லிங்கசெட்டி தெரு, சென்னை-1

354

முருகு

(மாத இதழ்)

ஆசிரியர் : "தொடர்பன்"

தனித்தியங்கும் தமிழ்நாடு காணவும், முன்னேற்றத்தின் முட்டுக்கட்டைகளை சுட்டுத் தகத்தெறியவும் முனைந்து வெளிவருகின்ற ஒரு திங்கள் இதழ்.

ஆண்டு ரூ. 3. தனிப்படி அ. 4.

முருகு அலுவலகம்
69, நைனியப்பன் தெரு
மண்ணடி, சென்னை-1

வானவில்

(மாதம் இருமுறை)

ஆசிரியர் : வே. முருகன்

என்ன அழகான பெயர்! எழில் மிகுந்த படங்கள், கவிதைகள், கட்டுரைகளோடு விரைவில் தோன்றப்போவதை எதிர்பாருங்கள்.

விலை ரூ- 0-1-6 ஆண்டு ரூ- 3-8-0-

எல்லா ஊர்களிலும் விற்பனையாளர்கள் தேவை.

விவரங்களுக்கு :

வானவில் நிலையம்
69, நயினியப்பன் தெரு
மண்ணடி, சென்னை-1

Wrapper printed at Sun Press, 41, Nainiappen St. Mannady, Madras-1